உண்மையை உரைக்க
TO TELL THE TRUTH

# கனகத்தூதன்

Canadian Tamil Catholic Messenger

CanaCaThuthan

Issue 63 July 20, 2024 இதழ் 63

Publication Mail
Agreement No: 41416031

Return Undeliverable
Canadian Addresses to:
The Canadian Tamil
-Catholic Messenger
708 Aspen Road
Pickering, ON L1V 3Z1

மிடலன்ட் திருயாத்திரைச் சிறப்பிதழ்
Special Issue on Midland Pilgrimage




# மருதமடு அன்னையின் மணிமுடிசூட்டு நூற்றாண்டு விழா

**மருதமடு அன்னைக்கு மணிமுடிசூட்டிய நூற்றாண்டுவிழா மடுத்திருப்பதியில் யூலை 2, 2024 மிகச்சிறப்பாக நடைபெற்றது.**

இவ்விழா யூலை 1, நற்கருணை ஆராதனையுடன் தொடங்கியது. தொடர்ந்து அழகுநிறை வாகனத்தில் தூய்மைமிகு நற்கருணையை பல ஆயர்கள் , குருக்கள், கன்னியர் மக்கள் இருந்த மைதானத்தைச் சுற்றிப் பவனியாக எடுத்து வந்து ஆசீர் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நூற்றாண்டு மலர் வெளியிடப்பட்டு, முடிவில் புதிய குவிமாடம் (*Dome*) ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. இப்புதிய குவிமாடம் மக்கள் அமைதியாக இருந்து அன்னையிடம் மன்றாடும் வசதியுடன் மிக நேர்த்தியாகவும், உள்ளும் புறமும் மிக அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

யூலை 2, திருவிழாத் திருப்பலியும், திருப்பலியைத் தொடர்ந்து அன்னைக்கு மணிமுடி சூட்டும் விழாவும் நடைபெற்றது.

அதன் பின்னர் நம்அன்னை அலங்கரிக்கப்பட்ட தேரில் அழகு தெய்வமாக ஆயர்கள், குருக்கள்,கன்னியர்கள் அணிவகுத்து முன் செல்ல மைதானத்தில் கூடியிருந்த மக்களைத் தரிசித்து ஆசீர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, பொன் எழுத்தாக்களால் பொறிக்கப்பட வேண்டிய அன்னையின் மணிமுடி சூட்டு விழா நினைவாக, இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் மருதமடு அன்னை திருஉருவத்துடன், 25க்குரிய அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்டது.

மரியே வாழ்க! எம் மருதமடு அன்னையே வாழ்க!


10th Annual
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT SUN
24 25
12PM - 11PM 11AM - 9PM
EXPECTED ATTENDEES
300, 000 +
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
FREE ADMISSION
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
PROUDLY HOSTED BY
SUPPORTED BY
Canada
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
Booth Inquiries:
info@canadiantamilcongress.ca
416.240.0078
tamilfest.ca @TamilFest

கனகத்தூதன்
CanaCaThuthan

# 2-வது ஒருங்கிணைந்த பயண அமர்விற்கான செயல்முறை



உலக ஆயர்கள் மாமன்ற பொதுச் செயலகத்தின் 15-வது பொதுச் சபை உறுப்பினர்கள், வரவிருக்கும் இரண்டாவது ஒருங்கிணைந்த பயண அமர்விற்கான *Instrumentum laboris* என்ற வரைவுத் தொகுப்பு தயாரிப்பைத் திருத்தந்தையின் வாழ்த்துடன் ஆரம்பித்தனர். இவ்வாண்டில் இடம்பெற உள்ள இரண்டாவது உலக ஆயர் மாமன்ற தாயாரிப்புக் கூட்டத்திற்கு உதவும் வகையில் 20 இறையியலாளர்கள் உரோம் நகரில் கூடி *Instrumentum laboris* என்ற வரைவுத் தொகுப்புத் தயாரிப்பு ஏட்டை, இறைமக்களின் பதிலுரைகளின் உதவியுடன் தயாரித்துள்ளனர்.


கடந்த ஒன்றரை வாரங்களாக உரோமில் இடம்பெற்ற இறையியலாளர் கூட்டத்தின்போது, உலகின் ஆயர் பேரவைகள், கீழை வழிபாட்டு முறை கிறிஸ்தவ சபைகள், துறவியர் அமைப்புக்கள், பங்குத்தள அருள்பணியாளர்கள் மற்றும் இறைமக்களின் கருத்துக்களைத் தாங்கிய 100க்கும் மேற்பட்ட அறிக்கைகள் விவாதிக்கப்பட்டன.

ஒன்றிணைந்த பயணத்தின் முழு செயல்முறையையும் (*entire synod*) உயிரூட்டம் (*animation*) செய்த சுற்றறிக்கையின் கொள்கையுடன் தொடர்ந்து நிலைத்திருக்க, இந்தப் பரந்த அளவிலான ஆலோசனையை நாங்கள் மேற்கொள்ள விரும்புகிறோம் என்று உலக ஆயர்கள் மாமன்றத்தின் பொதுச்செயலர் கர்தினால் மாரியோ கிரேக் (*Mario Grech*) கூறினார்.

வரவிருக்கும் நாள்களில், பரந்த அளவிலான மதிப்பாய்வில் இருந்து வரைவுத் தொகுப்பு (*Instrumentum laboris*) தயாரிப்பு ஏட்டின் புதிய பதிப்பு வரைவு செய்யப்படும் என்றும், அந்த வரைவு, இறுதி ஒப்புதலுக்காகத் திருத்தந்தைக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர், பொதுச் சபையின் (*Ordinary Council*) ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பீடம் முதியோரையும், அவர்தம் சமூகப் பங்களிப்பையும் ஊக்குவிக்கிறது

திருப்பீடம், முதியோர்களுக்கான ஆதரவையும் அவர்களின் சமூகப் பங்களிப்பையும் ஊக்குவிக்கிறது என்றும், மே 20 முதல் 24 வரை, நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் அவையின் தலைமையகத்தில் நடைபெற்றுவரும் முதியோர்களுக்கான திறந்தநிலை பணிக்குழுவின் 14-வது அமர்வில் உரையாற்றியபோது ஐ.நா. விற்கான திருப்பீடப் பிரதிநிதி பேராயர் *Gabriele Caccia* கூறியுள்ளார்.




மே 20, வெளியிட்ட அறிக்கையில், முதலில் நகரத்திலும் அல்லது கிராமப்புற சூழலிலும் சமூக வாழ்வில் பங்கேற்கும் திறனில் வயதானவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துரைத்த பேராயர் *Caccia* அவர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு மலிவு விலையில் வீடுகள் கிடைப்பது, மளிகை பொருட்கள், நல வசதிகள், பொது சேவைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் ஆன்மிக பராமரிப்பு யாவும் இந்த காரணிகளில் அடங்கும் என்று குறிப்பிட்டார்.
சமூகங்கள் எவ்வாறு உள்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் வீட்டுத் திட்டங்களை சிறப்பாக மேம்படுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டிய பேராயர் *Caccia* அவர்கள், இது வயதானவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றவர்களுடன், குறிப்பாக இளைய தலைமுறையினருடன் தொடர்புகொள்வதற்கும் உதவுகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

குடும்பங்கள் மற்றும் முறைசாரா பராமரிப்பாளர்கள் எவ்வாறு முதியோர்களுக்கு அவர்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அவர்களின் வீடுகளை இடமாற்றம் செய்யாமல் மாற்றியமைக்க உதவ முடியும் என்பதற்கு தலைமுறைகளுக்கிடையேயான வீடமைப்புத் திட்டங்கள் ஒரு எடுத்துக்காட்டு என்பதையும் பேராயர் *Caccia* எடுத்துரைத்தார்.
பொதுவாழ்க்கை மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்குச் சொந்தம் என்ற பகிரப்பட்ட வாழ்க்கைப் பிணைப்புகள் வழிகாட்ட வேண்டும் என்று குறிப்பிட்ட பேராயர் *Caccia* அவர்கள், தாத்தா பாட்டி தங்கள் சொந்த அனுபவங்களையும் நுண்ணறிவுகளையும் தங்கள் பேரக்குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்பதையும் ஓர் எடுத்துக்காட்டாகக் கூறினார்.
இயற்கை மரணம் வரை மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அனைத்து நபர்களும் சமமாக மதிக்கப்படும் அளவிற்கு அவர்களுக்கு 'கனிவிரக்கமுள்ள துணை' தேவை என்பதை சுட்டிக்காட்டிய பேராயர் *Caccia* அவர்கள், ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கையின் மிக நுட்பமான தருணங்களில் கூட, அவர்களுடன் இணைந்து அக்கறையுடன் இருப்பதை உணர வைக்கும் முயற்சிகளை திருப்பீடம் ஊக்குவிக்கிறது என்றும் கூறினார்.

இறுதியாக, மனித குடும்பத்தின் அன்புக்குரிய உறுப்பினர்களாக முதியவர்களின் இருப்பு மற்றும் அவர்களின் கண்ணோட்டங்கள் மதிக்கப்படும் சமூகங்களை உருவாக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென ஊக்குவித்து பேராயர் *Caccia* தனது உரையை நிறைவு செய்தார்.

கனகத்தூதன்
Canadian Tamil Catholic Messenger
CanaCaThuthan

நிறுவனர்/Founder:
அன்ரன் சின்னராசா பிலிப்
Anton Sinnarasa Philip

ஆசிரியர் குழு இணைப்பாளர்/
Editorial board coordinator:
ஆனந்தம் அன்ரனி
Anantham Antony

canacathuthan@gmail.com
416.300.7026

நிர்வாகம்/Administration:
அஞ்சலோ சுவாம்பிள்ளை
Angelo Swampillai

கனகத்தூதன் (கனடாவின் கத்தோலிக்க தூதனாக) கடவுளின் அரும்பெரும் செயல்களை எடுத்துரைக்கவும், தனது வாசகர்களுக்கு திருச்சபையின் போதனைகளையும் அறிவுறுத்தவும், ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்தவும், விசுவாச வாழ்வை உறுதிப்படுத்தவும், உலக, தாயக, கனடிய கத்தோலிக்க செய்திகளை உண்மையான வழியில் தரவும் முயற்சி செய்வான்(ள்). கனகத்தூதனில் தோன்றும் ஆக்கங்கள், படைப்புகள் அனைத்திற்கும் ஆக்கியவர்களே பொறுப்பாவர். விளம்பரங்களில் இடம் பெறும் தகவல்களுக்கு கனகத்தூதன் பொறுப்பல்ல.

The CanaCa Thuthan EVANGELIZES by proclaiming stories of God's great deeds taking place in the universal Church. CanaCa Thuthan EDUCATES by challenging its readers to a deeper understanding of Catholic teaching and to a greater commitment in living it out. CanaCa Thuthan INFORMS by providing objective and accurate news information about the church, both local and worldwide. CanaCa Thuthan does not take the responsibility of the views expressed by various authors and the information in the advertisements.

கனகத்தூதனை
இப்போது e-paper
ஆகவும் வாசித்திடலாம்.

தங்கள் பிரதிகளுக்கு
canacathuthan@gmail.com
or
416 300 7026

# ஆசிரிய குழுவின் எண்ணங்கள்...

அன்பார்ந்தவர்களே,

மீண்டும் மிட்லன்ட் மறைசாட்சிகளின் திருத்தலத்தில் நாம் ஒன்று கூடி இறைவனை வழிபடவும், எமது சகோதரத்துவத்தை புதுப்பிக்கவும் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்வடைகிறோம். உக்ரைன், பாலஸ்தீனம், இஸ்ரயேல், சூடான், மியான்மார் பகுதிகளில் வாழும் மக்களுக்காக செபிக்க வலியுறுத்தி, நம் அன்னையாகவும் அரசியாகவும் இருக்கும் கன்னி மரியாவிடம் இதற்கான பரிந்துரையை நாடுவோம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறியபடி அமைதிக்காக செபிப்போம். உலககெங்கும் போரினால் துன்புறும் மக்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. போர் துன்பத்தை மட்டுமே கொடுக்கும். இழப்புக்கள் கொடுக்கும் வலிகளின் சுமைகள் எத்தனை கொடுமை என அனுபவித்த இனம் நாம். எம் மக்கள் இன்றும் உரிமை இழந்து, ஆயுதம் இன்றி அழிக்கப்படுவதையும், நாம் கையால் ஆகாதவர்களாக அமைதியாக பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இந்த நிலை மாற வேண்டும், அனைத்து மக்களும் அவரவர் நாட்டில் தம் உரிமைககளுடனும், பாதுகாப்புடனும், மகிழச்சியுடனும் வாழும் நிலை உருவாக வேண்டும்.

இந்நிலை உருவாக, நாட்டுத் தலைவர்கள் மனிதநேயத்தை மனதில் கொண்டு மத்தியக்கிழக்குப் பகுதியிலும் மற்றும் உக்ரைனில் இடம்பெறும் மோதல்களுக்கான அமைதி வழிகள் குறித்து ஆராய்ந்து விரைந்து செயற்பட வேண்டும். மோதல்கள் முடிவுக்கு வருவதற்கான வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

போர் வழியாக அமைதியைக் கொண்டுவர முடியாது, மத்தியக்கிழக்கு, உக்ரைன் உட்பட உலகின் அனைத்துப் பகுதிகளிலும் அமைதி நிலவ வேண்டும் என்ற திருத்தந்தையின் விண்ணப்பத்தை ஏற்று போரை நிறுத்த வேண்டி செபிபோம்,

அத்துடன் இயேசுவினுடைய வார்த்தையைக் கேட்பதும், தனிப்பட்ட இறைவேண்டலிலும், நற்கருணை ஆராதனையிலும் நம்மை ஆட்படுத்திக்கொள்வதும் தூய ஆவியாரின் குரலுக்கு நம்மில் இடமளிக்க உதவுகிறது என்றும், ஒருவருக்கொருவர் நல்ல வார்த்தைகளைப் பேசும்போது கூட, நாம் ஒருவருக்கொருவர் ஆற்றுப்படுத்தும் இயேசுவின் மென்மையான குரலின் எதிரொலியாக மாறுகிறோம் என்ற திருத்தந்தை வார்த்தையின்படி வாழ்வோம்.

---

# யூபிலி ஆண்டில் வழங்கப்படும் நிறைபேறுபலன்கள்



2025ஆம் ஆண்டு திருஅவையில் சிறப்பிக்கப்படும் யூபிலி ஆண்டில் வழங்கப்படும் நிறைபேறுபலன்கள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது *Apostolic Penitentiary* எனப்படும் திருஅவையின் மனசாட்சி திருப்பீடத்துறை.

நிறைபேறு பலன்களை வழங்குவது குறித்த விவகாரங்களில் முழு அதிகாரம் பெற்றுள்ள இந்த துறை வெளியிட்டுள்ள புதிய ஆணையின்படி, யூபிலி ஆண்டில் பல்வேறு நிறைபேறுபலன்களைப் பெறுவதற்குரிய வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நம்பிக்கையின் திருப்பயணியாக ஒவ்வொரு கிறிஸ்தவரும் நடைபோட வேண்டும் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அழைப்புக்கேற்ப, ஒவ்வொரு கிறிஸ்தவரும் யூபிலி ஆண்டின் சிறப்புக் கொடையான நிறைபேறுபலன்களை பெறுவதற்குரிய சிறப்பு பக்தி முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என இவ்வறிக்கை கூறுகிறது.

கடவுளின் இரக்கம் எல்லைகளற்றது என்பதை மீண்டும் கண்டுகொள்வதற்கு யூபிலி ஆண்டின் நிறைபேறுபலன்கள் உதவும் என்ற திருத்தந்தையின் அறிவிப்பையும் மேற்கோள் காட்டும் திருஅவையின் மனசாட்சி துறை, நிறைபேறுபலன்கள் யூபிலியின் அருள் எனவும் கூறியுள்ளது.

யூபிலி ஆண்டின் நிறைபேறு பலன்களை பெறுவதற்குரிய மூன்று வழிகளாக, யூபிலி கொண்டாடங்கள் இடம்பெறும் புனித தலங்களுக்கு திருப்பயணம் மேற்கொள்ளல், புனித இடங்களுக்கு பக்தியுடன் சென்று சந்தித்தல், இரக்கத்தின் மற்றும் நோன்பின் நடவடிக்கைகள் என சுட்டிக்காட்டுகிறது இத்திருப்பீடத்துறை.

யூபிலி கொண்டாட்டங்கள் இடம்பெறும் முக்கிய தலங்களாக, உரோம் நகரிலுள்ள நான்கு பெரிய பெருங்கோவில்கள், எருசலேமில் இயேசுவின் கல்லறை இருக்கும் பேராலயம், பெத்லகேமின் இயேசு பிறந்த இடத்தின் பேராலயம், நாசரேத்தூரில் உள்ள மங்களவார்த்தை செப பேராலயம், மற்றும் தலத்திருஅவைகளில் ஆயர்களால் குறிக்கப்பட்டுள்ள புனித தலங்கள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த புண்ணிய தலங்களில் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றபின் இந்த புண்ணியதலங்களில் திருப்பலியிலோ, திருவழிபாட்டுச் சடங்குகளிலோ, சிலுவைப்பாதை, செபமாலை போன்ற பக்தி முயற்சிகளிலோ பங்குபெறுபவர்களுக்கு இந்த பரிபூரண பலன் கிட்டும்.

உதவித் தேவைப்படுவோரை சென்று சந்தித்து உதவுதல், ஏழைகளுக்கு உதவுதல், மத மற்றும் பிறரன்பு அமைப்புகளுக்கு ஆதரவளித்தல், சுயவிருப்பப் பணியாளர்களாகச் சேவையாற்றுதல் போன்றவைகளையும் முன்மொழிந்துள்ளது திருஅவையின் மனசாட்சி திருப்பீடத்துறை.

கனகத்தூதன்
CanaCaThuthan

# புதுமைகள் போன்ற அசாதாரண நிகழ்வுகள் குறித்த விதிமுறைகள்



விசுவாசக் கோட்பாடுகளுக்கான திருப்பீடத்துறை

திருஅவை விசுவாசிகளிடையே புதுமைகள் போன்று புதிதாக அசாதாரண தோற்ற நிகழ்வுகள் இடம் பெற்று மக்கள் நம்பி செயல்படும்போது, தல திருஅவை மற்றும் அகில உலகத் திருஅவை பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகள் குறித்த ஆணை ஒன்றை விசுவாசக்கோட்பாடுகளுக்கான திருப்பீடத் துறை வெளியிட்டுள்ளது.

இத்தகைய தோற்ற நிகழ்வுகள் இடம்பெறும்போது, தலத்திருஅவையோ, திருப்பீடமோ இதனை ஓர் இயற்கையை மீறிய அசாதரண நிகழ்வு என்று அறிக்கையிடாமல், அதேவேளையில் பக்தி முயற்சிகளையும் திருப்பயணங்களையும் ஊக்குவிக்க முன்வரவேண்டும் எனவும் இந்த அறிக்கை துவக்கத்திலேயே தெளிவாகத் தெரிவிக்கிறது. இயற்கையைத் தாண்டிய அசாதாரண தோற்ற நிகழ்வு நிலை குறித்த இந்தப் புதிய விதிமுறைகளை உள்ளடக்கிய இந்த ஆணை மே 17-ஆம் தேதி வெளியிடப்பட்டு, மே 19-ஆம் தேதி பெந்தக்கோஸ்து திருவிழா அன்று நடைமுறைக்கு வந்தது.

அசாதாரண தோற்ற நிகழ்வுகள் தொடர்புடைய விதிமுறை மாற்றங்கள் குறித்து 2019-ஆம் ஆண்டே ஆய்வுகள் துவக்கப்பட்டதாகவும், இந்தப் புதிய விதிமுறைகளைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அங்கீகரித்துள்ளதாகவும் விசுவாசக்கோட்பாடுகளுக்கான திருப்பீடத்துறையின் தலைவர் கர்தினால் *Victor Manuel Fernindez* தெரிவித்தார். பலவேளைகளில் இந்த அசாதாரண தோற்ற நிகழ்வுகள் ஆன்மிகக் கனிகளைக் கொடுத்துள்ளதோடு, விசுவாசம், பக்தி முயற்சிகள், உடன்பிறந்த உணர்வு நிலைகள், பிறரன்புப் பணிகள் ஆகியவை பெருகிடவும் உதவியுள்ளன எனக்கூறிய கர்தினால், இதனால் பல திருத்தலங்கள் உருவாகவும் வழி பிறந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். அதேவேளை, இத்தகைய அசாதரண தோற்ற நிகழ்வுகள், மக்களைத் தவறாக வழி நடத்தவும் காரணமாகி, இலாப நோக்குடனும், அதிகார ஆசையுடனும், புகழ் மற்றும் ஏனைய தனிப்பட்ட இலாபங்களுக்காகவும் பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளதையும் கர்தினால் *Manuel Fernindez* சுட்டிக்காட்டியுள்ளார்.


மக்கள் நம்பும் அசாதாரண நிகழ்வுகளில் இறைச்செயல்பாடுகளுக்குரிய அடையாளங்கள் இருக்கின்றனவா என்பதையும், விசுவாசம் மற்றும் ஒழுக்க ரீதி கோட்பாடுகளுக்கு எதிரானவை அந்தத் தோற்ற நிகழ்வு தொடர்புடையவைகளில் இடம்பெற்றுள்ளனவா என்பதையும், இந்த அசாதாரண நிகழ்வுகள் குறித்த ஆன்மிகக் கனிகளை அனுமதித்தல் அல்லது அவைகளின் தீமை குறித்து மக்களுக்கு எச்சரித்தல், அவைகளின் மேய்ப்பணி மதிப்பீடுகள் குறித்து கலந்தாலோசித்தல் போன்றவைகளையும் திருஅவை தெளிந்து தேர்வு செய்யும் என இந்தப் புதிய விதிமுறைத் தொகுப்பில் கூறப்பட்டுள்ளது.

இயற்கைக்கு மீறிய ஒரு அசாதரண இறைத்தலையீடு இருப்பதாக நம்பப்படும் வேளைகளில் அவ்விடங்களில் மேய்ப்பணி மதிப்பீடுகளை ஏற்றுக்கொண்டு, திருப்பயணங்களை ஊக்குவிக்க தலத்திருஅவை அங்கத்தினர்களைக் இந்த திருப்பீடத்துறை கேட்டுள்ளது.

மேலும், இத்தகைய சிறப்புத் தோற்றநிலைகள் இடம்பெறும் வேளைகளில் அங்கு எழுத்துவடிவில் எதுவும் அளிக்கப்பட்டிருந்தால், அங்கு விசுவாசக்கோட்பாடு தொடர்புடைய தெளிவுத்தன்மை தேவைப்படும் என்பதையும், ஆன்மிகக் கனிகளை வழங்குவதாக இருக்கும் அசாதரண நிகழ்வுகள் தொடர்புடைய சில குழப்பமான கூறுகள் வெளிப்படும்போது, உடனடி தடைகள் மக்களின் விசுவாசத்திற்கு ஊறுவிளைவிக்கும் என்பதால், தடைகளை மேற்கொள்ளாமல், அதேவேளை இத்தகைய நிகழ்வுகளை ஊக்குவிப்பதிலிருந்தும் ஆயர்கள் விலகியிருக்க வேண்டும் எனவும் திருப்பீடத்துறை கேட்கிறது.

அசாரண நிகழ்வுகள், இறைத்தலையீடுகள் போன்றவை குறித்த விடயங்கள் எழும்போது, அவைகளைத் தெளிவாக ஆராய்ந்து அது குறித்த விவரங்களை விசுவாசக் கோட்பாடுகளுக்கான திருப்பீட அவையிடம் சமர்ப்பிக்க வேண்டிய ஆயர்களின் கடமையையும் விசுவாசக் கோட்பாடுகளுக்கான திருப்பீடத் துறை வலியுறுத்தியுள்ளது.

# இராணுவத் தீர்வுகள் போர்களை முடிவுக்குக் கொண்டுவராது!



போர்களை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் இராணுவ தீர்வுகள் பயன்தர வாய்ப்பில்லை ஆதலால், வேறு பாதைகளைத் தேடவேண்டும் என்றும், அணு ஆயுதங்களின் ஆபத்துகள் மனிதகுலத்திற்கு பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகின்றன என்று எச்சரித்தும், போர்களை முடிவுக்குக் கொண்டு வரும் அமைதிக்கான பாதைகளையும் பேராயர் *Gabriele Caccia* வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கில் நிகழ்ந்து வரும் போர்களைக் கருத்தில் கொண்டு, உலகளாவியத் தூதரக உறவுகளுக்குள்ளும் கூட, விரிவாக்கத்தை எளிதாக்கும் மற்றும் இன்னும் பயன்படுத்தப்படாத வழிமுறைகள் ஏதாகிலும் உள்ளதா என்றும் இந்த நேர்காணலில் கேள்வி எழுப்பியுள்ளார் பேராயர் *Caccia*.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்குத் தற்போது ஆயுத வர்த்தகத்திற்காக அதிகம் செலவிடப்படுவதைச் சுட்டிக்காட்டிய பேராயர் *Caccia* அவர்கள், அத்தகைய முதலீடுகள் சமூக-பொருளாதார மேம்பாடு மற்றும் மோதல்களைத் தடுக்கும் திட்டங்களுக்குச் சிறப்பாகச் செலவிடப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும் நம்பிக்கை மற்றும் தூதரக உறவுக்கான கட்டமைப்புகள், ஒத்துழைப்பை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து கூறிய பேராயர் *Caccia*, அணு ஆயுதங்களின் ஆபத்துகள் குறித்துத் திருஅவை கொண்டுள்ள பெரும் அக்கறையையும் அந்நேர்காணலில் சுட்டிக்காட்டினார்.

கனகத்தூதன்
CanaCaThuthan

# போர் என்ற கருத்து மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்!



கர்தினால் பியெத்ரோ பரோலின்.

சில வேளைகளில் தூதரக முயற்சிகள் சிறிய முடிவுகளைத் தருவதாகத் தோன்றினாலும், நாம் ஒருபோதும் சோர்வடையவோ, அல்லது விட்டுவிடத் தோன்றும் சோதனைக்கு அடிபணியவோ கூடாது என்றும், நமது கடமையாக அமைந்துள்ள அமைதி என்பது நமது அன்றாட வாழ்வில், நமது நகரங்களில், நாடுகளில், உலகில் தொடங்குகிறது என்றும், அமைதியைக் கட்டியெழுப்பவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியும் திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் கூறினார்.

இத்தாலிய *RAI* பத்திரிகையாளர் *Piero Damosso* எழுதியுள்ள, *Can the Church stop the war? An investigation sixty years after Pacem in terris* அதாவது, "திருஅவை போரை நிறுத்த முடியுமா? அவனியில் அமைதி — திருமடலின் அறுபது ஆண்டுகளுக்குப் பிறகான ஆய்வு" என்ற நூல் இந்த விருதைப்பெற்றுள்ள வேளை, அதுகுறித்து குறிப்பிட்ட கர்தினால் பரோலின், போர் என்பது மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு சான்றாக இது அமைந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

*1963*-ஆம் ஆண்டு ஏப்ரல் *13*-ஆம் தேதி, புனித சனிக்கிழமையன்று, திருத்தந்தை *23*-ஆம் யோவான் பவுல் அவர்களின், கடவுளுடனும், அனைத்து மக்களுடனும், குடும்பங்களில் அமைதியின் அவசியத்தை வலியுறுத்திய வரலாற்று வானொலி செய்தி ஒன்றை நினைவுகூர்ந்த கர்தினால் பரோலின், உலகளாவிய அமைதி என்பது அனைவருக்கும் நலம்பயக்கக் கூடியது என்று மீண்டும் வலியுறுத்தினார்.

ஆகவே, உலகின் பல்வேறு பகுதிகளில் தற்போது நிலவும் மோதல்களை எதிர்கொள்ளும் வகையில், அமைதிக்கான முயற்சிகள் பலனைத் தரும் என்ற உறுதியை ஏற்படுத்தும் வகையில் தூதரக முயற்சிகள் அமைய வேண்டியதன் அவசியத்தையும், அமைதியின் கைவினைஞர்களாக இருப்பதற்கு ஒரு கூட்டு முயற்சிக்கும் ஒத்துழைப்புக்கும் அழைப்புவிடுத்தார்.

போர்ச்சூழலை உருவாக்காதீர்

உக்ரைன் நாட்டிற்கு எதிரான இரஷ்யாவின் தாக்குதலுக்கு பதில் தாக்குதலாக உக்ரைனுக்கு மேற்கத்திய ஆயுதங்களை வழங்கி போரிடவைப்பது குறித்த முன்மொழிதல்கள், கட்டுப்படுத்த முடியாத ஒரு சூழலை உருவாக்கலாம் என்ற அச்சத்தை திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின் வெளிப்படுத்தியுள்ளார்.
இரஷ்ய நிலப்பகுதியில் மேற்கத்திய ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறித்து சிந்திக்கப்பட்டுவருவது கவலை தரும் ஒன்று என்பதால், இது குறித்து உலகின் மீது அக்கறையுடைய ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என கர்தினால் கேட்டுக்கொண்டார்.

உக்ரைனிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட குழந்தைகள் அந்நாட்டிற்கே திரும்பி கொண்டுவரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு, அதற்காக திருஅவை பல்வேறு வழிகளில் முயன்று வருவதாகவும் கர்தினால் எடுத்துரைத்தார்.

திருஅவை நம்பிக்கைக்குரியதாக தொடர்ந்து செயலாற்றி வருகிறது என்பதை சுட்டிக்காட்டிய கர்தினால் பரோலின், திருஅவை தொடர்ந்து உதவிகளை ஆற்றி வருகிறது என்பதையும், ஒரு கையில் வாங்குவதை மறு கையால் மக்கள் நலனுக்காக வழங்கிவிடுகிறது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது என்றும் கூறினார்.

லெபனான் நாட்டில் திருப்பீடச் செயலரின் *5* நாள் பயணம் ஜூன் மாதம் *23*ஆம் தேதி, லெபனான் நாட்டிற்குச் சென்று *5* நாள் திருப்பயணத்தை மேற்கொண்ட திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், அரசு உயர் அதிகாரிகள், மாரனைட் வழிபாட்டுமுறை முதுபெரும் தந்தை, தலத்திருஅவை அதிகாரிகள், முதுபெரும் தந்தையர்கள், மதத்தலைவர்கள் ஆகியோரை சந்திப்பதுடன், பல்வேறு நாடுகளில் மருத்துவ மற்றும் பிறரன்புப் பணிகளை ஆற்றிவரும் *Knights of Malta* குழுவின் பணிகளையும் சென்று பார்வையிடுவார்.

லெபனான் நாட்டில் நிர்வாக ரீதியான தீர்வு காண்பதற்கு உதவி வரும் திருப்பீடம், அந்நாட்டில் பிறரன்புப் பணிகளை தொடர்ந்து ஆற்றிவரும் கத்தோலிக்க அமைப்பான *Knights of Malta* குழுவுக்கு ஊக்கத்தை வழங்கும் விதமாக இந்த பயணம் ஏற்பாடுச் செய்யப்பட்டுள்ளதாக கர்தினால் பரோலின் தெரிவித்துள்ளார்.

லெபனான் மக்களுக்கு கடந்த *70* ஆண்டுகளாக அடிப்படை மருத்துவ உதவிகளையும் சமுதாயப் பணிகளையும் ஆற்றிவரும் *Knights of Malta* குழு, *2020*ஆம் ஆண்டிலிருந்து விவசாய-மனிதாபிமானத் திட்டங்களையும் தீட்டி, அந்நாட்டில் உணவு பாதுகாப்பு, பொருளாதார மீட்பு ஆகியவைகள் வழியாக ஏழை மக்களுக்கு உதவி வருகின்றது. *Knights of Malta* பிறரன்பு குழு ஆறு விவசாய-மனிதாபிமானத் திட்டங்கள் வழியாக அந்நாட்டின் *69.26* விழுக்காட்டு நிலத்தின் விவசாயத்திற்கு உதவி வருகிறது. அண்மை புனித பூமி போரால் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கும் லெபனான் நாட்டில் *80* விழுக்காட்டு மக்கள் ஏழ்மையில் வாடிவரும் நிலையில், அந்நாட்டிற்கான பிறரன்பு உதவிகளை அதிகரித்துள்ளது இப்பிறரன்பு அமைப்பு.

வாய்ப்புக்கான கதவுகள் திறக்கும்போது சீனாவுக்குச் செல்வார் திருத்தந்தை!

சீனாவுக்கான முதல் திருப்பீடப் பிரதிநிதி "கர்தினால் செல்சோ கொஸ்தாந்தினியும் சீனாவும் - கிழக்கிற்கும் மேற்கிற்கும் இணைப்புப் பாலமாக இருந்தவர்" என்ற புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்ற திருபீடத்துறையின் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின், சீனாவுடனான தொடர் உரையாடல் மற்றும் சீன மக்களின் மீது திருத்தந்தையின் உறவு குறித்து பகிர்ந்துகொண்டார்.

உர்பான் பாப்பிறை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில், திருத்தந்தையின் சீன திருப்பயணம் குறித்த கேள்விக்குப் பதிலளித்த திருப்பீடச் செயலர் அவர்கள், சீன மக்கள் மீதும் அதன் கலாச்சாரத்தின் மீதும் மிகுந்த பாராட்டையும் மதிப்பையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எப்போதும் கொண்டிருப்பதாகவும், சீனப் பயணத்திற்கான சூழல்கள் உருவாகும்பட்சத்தில், திருத்தந்தை அவர்களும் விரைவில் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்வார் என்றும், உயர்ந்த மற்றும் மேன்மையான ஆசிய நாடு ஒன்றுக்கு பயணம் மேற்கொள்வது திருத்தந்தையின் விருப்பங்களில் ஒன்று என்றும் தெரிவித்தார்.

சீனாவின் கலாச்சாரம், மரபுகள், மற்றும் அவர்கள் தற்போது மேற்கொண்டு வரும் உறவுக்கான முயற்சிகளைப் பாராட்டிய திருப்பீடச் செயலர், உண்மையில் சீனா, திருத்தந்தையின் இதயத்திற்கும், அவரோடு இணைந்து பணியாற்றும் எங்களின் இதயத்திற்கும் நெருக்கமாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

சீனாவிற்கும் திருப்பீடத்திற்குமான ஓர் இணைப்புப் பாலமாக கர்தினால் கொஸ்தாந்தினி அவர்கள் பணியாற்றியதை நினைவு கூர்ந்த கர்தினால் பரோலின் அவர்கள், கொஸ்தாந்தினி திருப்பீடத்தோடு கொண்டிருந்த உறவு வழிமுறைகளை திருத்தந்தை அவர்களும் தொடர்ந்து பின்பற்றுவதாகத் தெரிவித்தார். மேலும், நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு சீன கத்தோலிக்கர்களின் சார்பில் அவர்களுடைய அருள்பணியாளர்களின் வழிகாட்டுதலில் தலைமைத் திருஅவையுடன் நடைபெறும் உரையாடல்கள் சிறந்த பலனைத் தரும் என்று நம்புவதாகவும் கர்தினால் பரோலின் தெரிவித்தார்.

# மதச் சுதந்திரத்திற்கான புதிய உலகளாவிய தளத்திற்கான மாநாடு


மாநாட்டின் உரையாற்றும் பேராயர் காலகர்

ஜூன் 5, மால்டாவின் இறையாண்மை ஆணையால் ஏற்பாடு செய்யப்பட்ட மதச் சுதந்திரம் மற்றும் ஒருங்கிணைந்த மனித வளர்ச்சி: ஒரு புதிய உலகளாவிய தளம் என்ற தலைப்பில் நடைபெற்ற மாநாட்டில், திருப்பீடத்தின் பன்னாட்டு உறவுகள் துறையின் தலைவர், பேராயர் பால் ரிச்சர்ட் காலகர் அவர்கள் கலந்துகொண்டார்.

இதில் உரையாற்றியபோது, இரண்டாவது வத்திக்கான் திருச்சங்கத்தின் கத்தோலிக்க திருஅவையை மத சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கு அர்ப்பணித்ததை நினைவு கூர்ந்த பேராயர் காலகர் அவர்கள், இதில் வெளியிடப்பட்ட *Dignitatis Humanae* ஆவணம் மத விடயங்களில் சமூகம், குடிமைச் சுதந்திரத்திற்கான நபர் மற்றும் சமூகங்களின் உரிமையை விளக்குகிறது என்றும் எடுத்துரைத்தார்.

கடவுளால் விரும்பப்பட்ட மனித இயல்பில் பொறிக்கப்பட்ட இந்தச் சுதந்திரத்தை பயன்படுத்தப்படுவதற்கு, எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்று மீண்டும் உறுதிப்படுத்தி மனித உரிமைகளுக்கும் மதச் சுதந்திரத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பையும் பேராயர் காலகர் தனது கருத்தில் இணைத்துக் கொண்டதுடன், மதச் சுதந்திரத்திற்கான உரிமையை மீறுவது ஓர் உரிமையை மட்டுமல்ல, முழு மனித உரிமைகளையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் விளைவைக் கொண்டுள்ளது என்பதையும் வலியுறுத்தினார். சில தரவுகளின்படி 490 கோடி மக்கள் மதச் சுதந்திரம் மீறப்படும் நாடுகளில் வாழ்கின்றனர் என்பது மிகவும் கவலை அளிக்கிறது என்று சுட்டிக்காட்டிய பேராயர் காலகர் அவர்கள், உலகில் உள்ள ஒவ்வொரு பத்து குடிமக்களில் குறைந்தது ஏழு பேர் அவர்களின் மத உரிமைகளைப் பயன்படுத்துவதில் தடுக்கப்படுகின்றனர் என்றும் விளக்கினார். இத்துடன், 36 கோடியே 50 இலட்சத்திற்கும் அதிகமான கிறிஸ்தவர்கள், ஏறக்குறைய 7 பேரில் ஒருவர், தங்கள் மத நம்பிக்கைக்காக அதிக அளவிலான துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர் என்றும், தலத்திருஅவைகள் மற்றும் கிறிஸ்தவ சொத்துக்கள் மீதான தாக்குதல்கள் 2023-ஆம் ஆண்டில் கணிசமாக அதிகரித்துள்ளன என்றும், முன்பை விட தற்போது அதிகமான கிறிஸ்தவர்கள் வன்முறைத் தாக்குதல்கள் குறித்துப் புகார் அளித்துள்ளனர் என்றும் பேராயர் காலகர் எடுத்துக்காட்டினார்.

# வாடகைத் தாய் முறையை ஒழிக்க திருப்பீடம் முயற்சி!

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையில் வாடகைத் தாய் முறையை ஒழிப்பதை மையமாகக் கொண்ட கருத்தரங்கம் ஒன்றை திருப்பீடத் துறையின் துணைச் செயலாளர் *Gabriella Gambino* ஜூன் 18 நடத்தினார்.

இக்கருத்தரங்கில், "வாடகைத்தாய் முறையை ஒழிக்க: பெண்கள் மற்றும் குழந்தைகளை சுரண்டுவதையும் பண்டமாக்குவதையும் தடுப்பது" என்பதை மையக்கருத்தாக கொண்டிருந்தது என்றும் கூறப்பட்டுள்ளது. அதில் பெண்கள் மற்றும் குழந்தைகளை அனைத்து வகையான சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்க அனைத்துலகத் திட்டமிடலை வலியுறுத்தினார் என்றும் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் தொடக்கவுரை ஆற்றிய திருப்பீடத் துறையின் துணைச் செயலாளர் *Gambino* வாடகைத் தாய் முறையை ஒழிப்பதில் அனைத்துலகச் சமூகத்தின் பதிலின் அவசரத்தை பிரதிபலிப்பதாக இந்தக் கருத்தரங்கு அமைந்துள்ளது என்றும், இதில் பாதிக்கப்பட்டவர்களின் மாண்பு மற்றும் அடிப்படை மனித உரிமைகளின் உலகளாவியப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பொதுவான உறுதிப்பாட்டின் சாத்தியத்தை ஆழமாக்குவது அவசியம் என்றும் எடுத்துக்காட்டினார்.



பிறப்பை ஒரு ஆள்மாறான செயல்முறையாக மாற்றுவது முதல் பெண்கள் மற்றும் குழந்தைகளை பண்டமாக்குதல் மற்றும் சுரண்டுதல் வரை வாடகைத் தாய் முறையுடன் தொடர்புடைய பல பிரச்சனைகளையும் நினைவுகூர்ந்த *Gambino*, இது அடிப்படை மனித உறவுகளை ஒழுங்குபடுத்தும் ஒரு வடிவமாகும் என்றும், இது பெண் மற்றும் குழந்தையின் அடையாளத்தையும் வாழ்க்கையையும் என்றென்றும் பாதிக்கும் என்றும் விளக்கினார்.

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் தூதரக அதிகாரிகள் குழு ஒன்றிற்கு ஆற்றிய உரையில், வாடகைத் தாய் முறை என்பது, பெண்கள் மற்றும் குழந்தைகளின் மாண்பு மற்றும் உரிமைகளை கடுமையாக மீறுவதாகும், மேலும் அனைத்துலகச் சமூகம், அனைத்து வகையான வாடகைத் தாய் முறைகளுக்கும் முழுமையான தடையை ஏற்படுத்துவதன் அவசரத்தை சிந்திக்க வேண்டும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# குணமாகாத புண்கள்! குணமாகாத உள்ளம்! குணமாகாத ஆன்மா!

டாக்டர் போல் ஜோசேப் (கனடா)



விவிலியத்தில் லூக்கா 17: 17 நாம் எல்லோரும் பலமுறை வாசித்திருப்போம் அல்லது வாசிக்க கேட்டிருப்போம். "மற்ற ஒன்பது பேரும் எங்கே" என்று இயேசு கேட்ட வார்த்தைகளைப் படிக்கும் போதெல்லாம் ஏதோ அந்த ஒன்பது பேரில் நானும் ஒருத்தனும் என்ற எண்ணம் எப்போதும் உள்ளூர வந்து செல்லும். இந்த கட்டுரையில் அந்த சம்பவத்தை பற்றி சற்று வித்தியாசமாக ஆராயலாம். இயேசு கலிலேயா,சமாரியா வழியாக எருசலேம் போய்க் கொண்டிருந்த பொழுது இந்தத் தொழு நோயாளிகளை குணமாக்கும் நிகழ்வு நடைபெற்றது. இயேசுவின் நகரம் என்று அழைக்கப்படும் கப்பர்நாகூம் முதல் எருசலேம் வரை கிட்டத்தட்ட 200 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தூரம். இந்த வழியாக அவர் வாழ்ந்த காலத்தில் பலமுறை சென்று வந்திருப்பார். 2022 இல் திருத்தலப் பயணம் சென்றபோது அந்த வழியாக நாங்களும் சென்ற அனுபவங்களை இனிமையோடு நினைத்துப் பார்க்கிறேன்.

தொழுநோயைப் பற்றிய பல குறிப்புகள் விவிலியத்தில் பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரை பல இடங்களில் உள்ளது. இது ஒரு தொற்று நோய் என்பதை அன்றே அவர்கள் அறிந்திருந்ததால்தான் ஊரை விட்டு ஒதுக்கி சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தல் எனும் நோய்ப் பரம்பல் தடுப்பு முறையினை அன்றே அவர்கள் கையாண்டு இருக்கிறார்கள். நோர்வே மருத்துவரான G.A.Hansen என்பவர் தான் 1773 இல் இந்த நோயை உண்டாக்குவது மைக்கோ பாக்டீரியம் லெப்ட்ரே என்ற பாக்டீரியா கிருமி என்று கண்டுபிடித்தார். பின்னர் அவரின் பெயராலேயே இந்த நோய் Hansen's diseases.என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அதன் பின்பு பல ஆண்டுகளுக்குப் பின்பு தான் அமெரிக்க மருத்துவர். G.H.Faget என்பவர் ஒரு மருந்தை கண்டுபிடித்தார். பின்னர் அந்த மருந்துக்கும் கிருமிகள் எதிர்ப்பை காட்டியதால் நோயின் வீரியம் குறைந்த பாடில்லை. 1970 களில் MDT என்ற சில மருந்துகளின் கூட்டுத் தொகுப்பாக இந்திய விஞ்ஞானி சாந்தாராம் என்பவர் புதிய மருந்தைக் கண்டுபிடித்து வெற்றி கண்டார். பின்னர் அவரது மருந்தே உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டு, இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகிறது. இத்தகைய மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இன்று உலகம் முழுவதும் தொழுநோய் பெரும்பாலும் ஒழிக்கப்பட்டு வருகிறது. 90 களில் நான் இந்தியாவில் மருத்துவம் பயின்ற போது சேலம் மாவட்டத்தில் செட்டிப்பட்டி என்ற ஊரில் ஒரு தொழுநோயாளர் மருத்துவமனை செயல்பட்டு வந்தது. அப்போது அங்கே சிலர் உள்நோயாளிகளாக இருந்து சிகிச்சை பெற்று வந்தனர். அப்போது பயிற்சி மருத்துவராக பல நாட்கள் அவர்களுடன் பழகிய நினைவுகளை என்றும் மறக்க முடியாது. முதலில் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டு பல மாதங்களுக்கு எந்த அறிகுறியும் இருக்காது, அதன் பின்பு தோலில் வெள்ளை நிறமான தடிப்புகள் உண்டாகும், அதில் எந்தவிதமான உணர்வுகளும் இருக்காது.

பாதிக்கப்பட்ட இடங்களில் ஊசியினால் குத்தினாலும் வலி ஏற்படாது, தடிப்பு சற்று பெரிதாகி முகம் காது கை கால் போன்ற இடங்களுக்கும் பரவி முகத்தில் விகாரமான தோற்றத்தை "லயன் ஃபேஸ்" உண்டாக்கும். கண்களின் புருவங்களிலும் உள்ள முடிகளும் கொட்ட ஆரம்பிக்கும், கை கால்களில் உள்ள நரம்புகள் பாதிக்கப்பட்டு செயலற்று அல்லது குறண்டிச் சுருங்க ஆரம்பிக்கும் போது எந்த சிகிச்சையும் எடுக்காத பட்சத்தில் புண்கள் உண்டாகி, இறந்த பிறகு தன் உடல் அழுகும் நிலையை, உயிரோடு இருக்கும்போதே தன் உடல் அழுகி விழும் நிலையை பார்த்து அனுபவிக்கும் ஒரு கொடிய வியாதியாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்நோய் ஏற்பட்டால் அவர்களை கப்பலில் ஏற்றி ஆளில்லாத தீவுகளில் கொண்டு போய் விடுவது வழக்கமானதாகும். அப்படி விடப்பட்டவர்களோடு பல கிறிஸ்தவ மிஷனரிகள் தங்களின் உயிரையும் தியாகம் செய்து அவர்களுக்கான பணிகளை செய்து வந்தது இன்றைய தலைமுறைக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இன்று புனிதராக போற்றப்படும் பெல்ஜியத்தை சேர்ந்த அருட்தந்தை டேமின் அவர்கள் ஹவாய் தீவுக்குச் சென்று தொழுநோயாளிகள் பலருக்கு சேவை செய்து இறுதியில் அவருக்கும் தொழுநோய் தொற்றி பின்னர் இறந்து போனார். 2009 இல் தான் அவருக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது, அது மட்டுமல்ல நம் எல்லோரும் தெரிந்த நாம் வாழும் காலத்திலேயே வாழ்ந்த புனித அன்னை தெரேசா அவர்களும் பல்லாயிரக்கணக்கான தொழுநோயாளிகளை அரவணைத்து பராமரித்தவர்.

இயேசு எருசலேமுக்கு போய்க் கொண்டிருந்தபோது கலிலேயா சமாரிய பகுதிகள் வழியாக சென்றார். ஒரு ஊருக்குள் வந்தபோது பத்து தொழு நோயாளிகள் அவருக்கு எதிர்கொண்டு வந்து தூரத்தில் நின்று கொண்டு ஐயா இயேசுவே எங்களுக்கு இரங்கும் என்று உரக்கக் குரல் எழுப்பி வேண்டினார்கள்.

அவர் அவர்களைப் பார்த்து நீங்கள் போய் உங்களை குருக்களிடம் காண்பியுங்கள் என்றார். அவ்வாறே அவர்கள் புறப்பட்டு போகும்போது அவர்கள் நோய் நீங்கிற்று. அவர்களுள் ஒருவர் தம் பிணி நீங்கியிருப்பதை கண்டு உரத்த குரலில் கடவுளை போற்றிப் புகழ்ந்து கொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார். அவருடைய காலில் முகம் குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். அவரோ ஒரு சமாரியர் இயேசு அவரைப் பார்த்து மற்ற ஒன்பது பேரும் எங்கே கடவுளைப் போற்றிப்புகழ அந்நியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பி வரக் காணோமே என்றார்.

இது ஒரு நிகழ்வு என்பதையும் கடந்து தொழுநோய் என்பது தொற்று நோய் என்பதால் அன்று சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட நிலையில் வாழ வேண்டி இருந்தது. ஆனால், இன்று நம் சமூகத்தில் தொற்றாத தொழு நோய்கள் பல உண்டு. இவை தனிமனித, குடும்ப, சமூக வாழ்வினை அழுகிப்போக செய்கின்றன. இவற்றைக் களைந்து குணமாக்கும் பணிக்கு தான் இறைமகன் மெசியாவாக வர வேண்டியிருந்தது. மீட்பு என்பது ஏதோ நாம் சிறு வயது முதல் கற்பனை செய்து வைத்திருக்கும் அழகான அமைதியான பரலோக வாழ்வு என்பது மட்டுமல்ல, இந்தப் பூலோகத்திலேயே மீட்போடு விடுதலையோடு வாழ்வது என்பதுதான்.

அன்று தொழுநோய் ஏற்பட்டால் என்ன மாதிரியான குணங்குறிகள் அல்லது அவர்களின் நிலை என்பது முற்றிலும் இன்றைய காலத்திற்கும் மிகப் பொருத்தமானதாகும். குறிப்பாக உணர்வின்றி தோல் மரத்துப் போவது போல பலரின் வாழ்வும் ஒரு மரத்துப்போன உணர்வற்ற வாழ்வாக இருக்கிறது. ஆறாத காயங்களும், புண்களும், வடுக்களும் நிறைந்த அனுபவங்களை கொண்ட வாழ்வாக இருப்பதால் தனிமனித, குடும்ப உறவுகள், அழுகிப் போகின்றன.

குணமாகாத ஆன்மா, குணமாகாத உள்ளம், குணமாகாத புண்களும் வடுக்களும் தான் பெரும்பாலான இன்றைய பல உடல்,உள நோய்களுக்கும், குடும்ப உடைதலுக்கும், சமூக சீர்கேடுகளுக்கும் காரணமாகிறது. இவைதான் சமூகத்தில் பரிணாம வளர்ச்சி அடைந்து பல பரிமாணங்களை எடுத்து இன்று வேறொரு வடிவில் அடக்குமுறைகள், இன ஒடுக்கு முறைகள், சாதிய வன்கொடுமைகள், இன, மதவெறி மற்றும் நம் காலத்திலேயே உதாரணமாக இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போர்கள் இப்படித் தொடர்கதையாகிறது.

இவையெல்லாம் இல்லாத ஒரு புதிய உலகைப் படைக்கவும், மீட்பளிக்கவும் தான் இயேசு மனித அவதாரம் எடுத்தார். ஏதோ நம் கையைப் பிடித்துக் கொண்டு இன்னொரு இனிமையான மறு உலக வாழ்விற்கு அழைத்துச் செல்வார் என்பது நம் நம்பிக்கையாக இருந்தாலும், இவ்வுலகில் வாழும்போதே அந்த மாற்றத்தை உண்டாக்குவதே மெசியாவின் மீட்பின் பணியாக இருந்தது.
தொழு நோயாளர் போல புறக்கணிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலையில் உள்ள, உரிமைகள் மறுக்கப்பட்ட, இருளில் வாழும் விடுதலைக்காக ஏங்கும் குரல் அற்றவர்களின் குரலாகத்தான் இயேசு போராடினார், வாழ்ந்து காட்டினார், தன்னையே பலியாக கொடையாக தந்தார்.

ஏழ்மையை ஒழிக்க வழி என்னவென்று ஒருவரிடம் கேட்டபோது ஏழைகளை ஒழித்து விட்டால் ஏழ்மை ஒழிந்து விடும் என்று சொன்னாராம். அதைத்தான் இன்றைய முதலாளித்துவப் பொருளாதாரம் உலகமயமாக்கல் என்ற போர்வையில் செய்து கொண்டிருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே இந்த சமூக மாற்றம் மற்றும் விடுதலையை அடைய, அதற்கான தீர்வுகளும், வழிமுறைகளும் என்ன என்பதை பற்றித்தான் மலைப் பிரசங்கம் முதல் கல்வாரி மலை வரை அவரது போதனைகளும் வாழ்வும் இருந்தது.
ஆனால் அதை மறந்து ஆன்மீக விடுதலையை மட்டுமே முன்னிறுத்தியதன் விளைவு தான், மதம் என்ற கட்டமைப்புக்குள்ளே சுருக்கி விட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆன்மீக விடுதலை மூலம் மனமாற்றம் உண்டாகி, சமூக விடுதலைக்கு வழி கோலுவதா அல்லது மனமாற்றம் உண்டாகி சமூக விடுதலைக்கு இட்டுச் செல்வதா அல்லது சமூக விடுதலை மூலம் மன மாற்றம் அதன் பின்பு ஆன்மீக விடுதலை என்பதா, இதில் எதை இயேசு நமக்கு போதித்தார் என்பதில் நாம் முதலில் தெளிவடைய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இயேசு வாழ்ந்த காலத்தில் அரசியல் சமூக அடக்கு முறைகள் தான் மேலோங்கி இருந்தது. ரோமையர்களின் ஆட்சிக்காலம், அவர்களின் வால்களாக இருந்த உள்ளூர் அரசர்களின் கொடுங்கோல் ஆட்சி, யூத மதபோதகர்களின் மக்கள் மீதான ஒடுக்குமுறை ஒருபுறம், மறுபுறம் தவறான சட்டங்கள், மூடநம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், பலியிடும் வழக்கம், கல்லால் எறிந்து கொல்லுவது, கழுமரம், சிலுவை மரம் ஏற்றிக் கொல்லும் தண்டனைகள்,சிறைச்சாலைகள், சித்திரவதைகள், கொத்தடிமைகளாக வாழும் நிலை. நாடு கடத்தல் அதிக வரிச்சுமை அதிலும் குறிப்பாக ரோமையர்களுக்கும் உள்ளூர் அரசர்களுக்கும் மதகுருக்களுக்கும் இப்படி மூன்று நிலையான தனித்தனி வரிகள் இவ்வாறாக அரசியல் சமூகப்பொருளாதார ரீதியான அடக்குமுறைகளுக்கு உள்ளே பல ஆயிரம் ஆண்டுகளாக சிக்கி இருந்த மக்கள், தங்களை மீட்க ஒரு விடுதலை வீரன் வரமாட்டானா என்றுதான் ஏங்கிக் கொண்டிருந்தார்கள். யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மீட்பர், படைகளோடும் சேனை களோடும் இன்றைய சினிமாக்களில் வரும் கதாநாயகர்கள் போல அப்படியே எகிறிக்குதித்து வந்து தங்களை காப்பாற்ற வரும் மெசியா என்று தங்களுக்குள்ளேயே மரபுவழியாக, கதைகளாக, கற்பனைகளாக வளர்த்துக் கொண்டிருந்தார்கள், ஆனால் அதுவோ முற்றிலும் மாறுபட்ட அன்பையும் மன்னிப்பையும் அறம் எனும் ஆயுதமாக ஏந்திய மனமாற்றத்தின் மூலம் அரசியல் சமூக விடுதலையை அடையும் வழிமுறையானது யூதர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

அதனால்தான் யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் இயேசு மீது வைத்த குற்றச்சாட்டுகளைப் பார்த்தாலே அவர் என்ன விதமான விடுதலைக்கான வழிமுறைகளை கையாண்டார் என்பது விளங்கிவிடும். இவன் தன்னை இறை மகன் என்று கூறுகிறான், மக்களைத் தூண்டி கலகம் செய்கிறான், மோசேயின் சட்டங்களுக்கு எதிராகப் பேசுகிறான், வரி செலுத்துவதைக் கண்டிக்கிறான், மற்றும் தன்னை யூதர்களின் அரசன் என்கிறான் என்பது போல சில குற்றச்சாட்டுகள்.

ஆனால் பிலாத்து என்கிற உரோமை ஆளுநர் சொல்வது என்னவென்றால் இவரிடத்தில் மரண தண்டனைக்குரிய குற்றம் எதுவும் நான் காணவில்லை என்று மறுத்து பேசுகிறான். பின்னர் தனது அரசியல் பதவியை காப்பாற்றிக் கொள்ள இவருடைய இரத்தப் பழியில் எனக்குப் பங்கு இல்லை என்று கை கழுவி தீப்பிடுகிறான். அந்த தீர்ப்பு தான் யூதர்கள் மாற்ற முயற்சி செய்தும் தோற்றுப் போன தீர்ப்பாகும்.

அதுதான் இயேசுவை அறைந்த சிலுவையின் மேல் உள்ள அந்த வாசகம் *I.N.R.I.* என்பதாகும். குற்றவாளிகளின் தீர்ப்பின் சுருக்கம் அடையாளமாக எப்போதும் அவர்களின் தலையின் மேலே வழக்கத்தில் உள்ள மொழிகளில் எழுதி மாட்டி விடுவது யூதர்களின் வழக்கமாக இருந்தது. அதன் விரிவாக்கம் "நசரேனாகிய இயேசு யூதர்களின் அரசன்" இதுதான் இறுதியில் மரண தண்டனைக்கு ஏதுவான குற்றச்சாட்டாகும். இதிலிருந்து என்ன புரிந்து கொள்ளப்படுகிறது என்றால் இயேசு யூதர்களின் அரச தலைவராக வரப்போகிறார், யூதர்களை ஆளப்போகிறார் அரசியலில் ஒரு பெரும் புரட்சியை செய்யப் போகிறார் என்பதுதான் யூதர்களின் வயிற்றில் புளியைக் கரைக்கும் விடயமாக இருந்தது.

இயேசுவின் பணி வாழ்வினாலும்,புதிய போதனைகளாலும், அற்புதங்களினாலும் கவரப்பட்ட மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் அவரை பின்பற்றி அவரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு பயணிக்க தொடங்கினார்கள். இதை பொறுத்துக் கொள்ள முடியாத அன்றைய யூதமத மற்றும் அரசியல் தலைமைகள் இயேசுவை கொலை செய்தனர்.

இதன் நீட்ச்சியாகவும் தொடர்ச்சியாகவும் இன்றும் இந்த நவ நாகரிகமென்ற போர்வைக்குள்ளே ஒளிந்திருக்கும் உலகத் தலைமைகளும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட அடியாட்களும், இனப்படுகொலை, பயங்கரவாத மற்றும் தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் கடந்த காலங்களில் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் பலவற்றையும், தொழிலாளர் வர்க்க மற்றும் சமூக நீதிக்கான போராட்டங்களையும் அடக்கி ஒடுக்கி இனப்படுகொலைகள் நடத்துதும் கடந்த கால வரலாறுகளில் நாம் கண்ட, மற்றும் இன்றும் காணுகிற நிகழ்வுகள் ஆகும்.

அவ்வாறு கொலை செய்யப்படும் புரட்சியாளர்களுக்கும் அவர்களை கொலை செய்த தலைமைகளுக்கும் மாறி மாறி சமாதானத்திற்கான நோபல் பரிசுகளும் வழங்கப்படுவது ஒரு வேடிக்கையான பரிசுகெட்ட விடையமாகும்.

**கனகத்தூதனை இப்போது e-paper ஆகவும் வாசித்திடலாம்.**

**தங்கள் பிரதிகளுக்கு**
canacathuthan@gmail.com
or
416 300 7026

# மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச்சுரூப முடிசூட்டு நிகழ்வும் அதன் பின்புலமும்

அருட்பணி ஞானமுத்து பிலேந்திரன்

## முன்னுரை

மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச்சுரூப முடிசூட்டு நிகழ்வும் அதன் பின்புலமும்

இறைவன் தமது அளவு கடந்த அருளையும் கருணையையும் மக்கள் மீது பொழிவதற்கும் மக்களை நெறிப்படுத்துவதற்கும், தாம் விரும்பிய குறித்த நபர்களையும் சிறப்பான இடங்களையும் தெரிவுசெய்து, தமது மீட்புச் செயலைப் பழைய ஏற்பாடு முதல் இன்றுவரை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார். பழைய ஏற்பாட்டில் யாக்கோபுக்குத் தம்மை வெளிப்படுத்திய இறைவன் பெத்தேல் என்னுமிடத்தையும், எரியும் புதரில் மோசேயுடன் பேச ஒரேபு மலையையும், பத்துக் கற்பனைகளை வழங்க சீனாய் மலையையும், புதிய ஏற்பாட்டில் இயேசுவின் பிறப்பிற்கு பெத்லகேம் சிற்றூரையும், இறை மகனின் மாட்சியை வெளிப்படுத்தளுபோர் மலையையும், இயேசுவின் சிலுவை மரணத்திற்குரிய இடமாகக் கல்வாரியையும் தேர்ந்து கொண்டார்.



மேலும் இறைபராமரிப்பின் தொடர்ச்சியாக நாம் வாழும் இக் காலத்திலும், உலகில் எந்தவித வரலாற்று முக்கியத்துவமும் பெறாத பல சிறு கிராமங்களைத் தெரிவு செய்து, தேவ அன்னையின் திருத்தலங்களாக வளர்த்து அண்டிவரும் பக்தர்களுக்கு அருள்மாரி பொழிந்து, புதுமைகள் புரிந்து, குறைகள் போக்கி அமைதியும் அருளும் வழங்குகின்றார். இவ்வாறு இலங்கையின் வட பகுதியில் வன்னி நிலப்பரப்பில் தோன்றிய திருத்தலமே மருதமடு அன்னையின் திருத்தலமாகும்.

ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியினரின் துன்புறுத்தலின் விளைவாக இலங்கைத் திருஅவைக்கு இறைவனின் மாபெரும் வரப்பிரசாதமாக இத்திருத்தலம் அமைந்தது எனக் கொள்வது மிகப் பொருத்தமானது. (இக்கட்டுரையில் இடம்பெறும் அதிக விடயங்கள் அருட்பணி. ஏ. ஜே. பி. அன்ரனயினஸ் அடிகளின், *The Chronicle of the Sanctuary of Our Lady of Madhu, 1979* என்னும் நூலிலிருந்து பெறப்பட்டவையாகும்).

## ஆரம்ப வரலாறு

மருதமடு மாதா திருச்சுரூபத்தின் ஆரம்ப வரலாற்றிற்கும், மாந்தை ஆலயத்திற்கும், மாந்தை ஆலயத்தில் மக்கள் வழிபாட்டிற்குப் பயன்படுத்திய ஆரோக்கிய மாதா திருச்சுரூபத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்னும் விடயம் பாரம்பரியமாகக் கையளிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு கையளிக்கப்பட்டு வந்த இத் தகவலை மடு ஆலயப் பங்குத்தந்தை வண. மசியெற் அமதி *(Fr. Massiet OMI)* அடிகள் மடுத்திருப்பதி ஆவணத் தொகுப்பில் 1886இல் முதலில் பதிவு செய்துள்ளார். இவரே மடுத்திருப்பதியின் நிகழ்வுகளைப் பதிவு செய்யும், அதாவது ஆவணத் தொகுப்பில் *(Codex Historicus)* எழுதும் மரபை முதலில் ஆரம்பித்தவர். இதைப் பதிவு செய்தபோது மாந்தையில் 1670இற்கு முன்பே ஒரு கத்தோலிக்க ஆலயம் இருந்தது என்பது பற்றிய செய்தியை அவர் தெரிந்திருக்கவில்லை. இதனை ஓர் ஊகமாகவே பதிவு செய்திருந்தார் என்பது அருட்பணி அன்ரனயினஸ் அமதி அவர்களின் கருத்து.

எனினும், 1614இல் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த வண. பேத்ரோ டி பெற்றன்கோ *(Friar Pedro de Betancor)* மாந்தையில் விசாலமான, கல்லாலான அழகிய ஆலயத்தைக் கட்டியதுடன் ஆலயத்திற்கு அருகாமையில் கல்லினால் இருமாடிக் கட்டடத்தையும் கட்டினார். *(VPP, II, 459)*. இதுவே அருட்தந்தையர்களின் தங்குமிடமாகவும் மாதோட்டத்திலுள்ள ஆலயங்களுக்கு முதன்மை ஆலயமாகவும் திகழ்ந்தது. புனித ஆரோக்கிய மாதாவிற்கு இந்த ஆலயம் நேர்ந்து தளிக்கப்பட்டது. (வுசயியெநஇ ஐஐஐஇ 194 ஞரநலசழளஇ 695). மருதமடு மாதா திருச்சுரூபத்துடன் தொடர்புள்ளதாக மாந்தை மாதா ஆலயம் விளங்கியது.

## வன்னி - பனங்காமம்பற்றில் ஆலயம்

வன்னி நான்கு பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பற்றும் வன்னியர் அல்லது வன்னிச்சி என்பவர்களால் ஆளப்பட்டது. அதேவேளை, வன்னி கண்டி அரசனின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. இக்காலத்தில் 2ம் இராஜசிங்க மன்னன் (1635-1687) கண்டி அரசை ஆண்டான். *(Quere, 230)*. வன்னிக்காட்டுப் பகுதியிலுள்ள பனங்காமப் பற்றில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த பேத்ரோ டி பெற்றன்கோ அடிகள் பலருக்குத் திருமுழுக்கு அளித்ததுடன் பனங்காமப் பற்றில் ஓர் ஆலயத்தையும் கட்டியுள்ளார். அதனை எந்தப் புனிதருக்கு நேர்ந்தளித்துள்ளார் என்பது பற்றிய குறிப்பு இல்லை. *(Queyrors, 695)* வன்னிக்காட்டுப் பனங்காமம் பற்றில் ஆலயம் உள்ளமை பற்றி மன்னார், மாதோட்டம் மற்றும் யாழ்ப்பாண மக்களும் அறிந்திருப்பதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் அதிகம் இருந்திருக்கின்றன. மடுக்கிராமம் பனங்காமம் பற்றில் அமைந்துள்ளது என ஆசிரியர் குவைறோஸ் குறிப்பிட்டுள்ளார் *(Queyros, p.51)*. இக் காலத்திற்குரிய ஏனைய வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி நோக்கும்போது, இவ்வாறு வன்னி



பனங்காமப்பற்றில் அமைந்த ஆலயம் மடுக் கிராமத்திலேயே அமைந்திருக்கும் எனக் கொள்ளலாம்.

மடுக்கிராமத்தில் மன்னார், மாதோட்ட, யாழ்ப்பாணக் கத்தோலிக்கர் போர்த்துக்கேயர் ஆட்சியில் யாழ்ப்பாண அரசில், அரச ஆதரவுடன் வேரூன்றி வேகமாகப் பரவிய கத்தோலிக்கம் 1658 முதல் ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்கள் மேற்கொண்ட கலாபனைகளால் பெரிதும் நலிவுற்றது. இப்பின்னணியில் ஒல்லாந்தர் கலாபனையிலிருந்து தங்களையும் தங்கள் இறை நம்பிக்கையையும் காக்கும் பொருட்டு, மன்னாரைச் சேர்ந்த இருபது குடும்பங்கள் கண்டி அரசிற்குட்பட்ட வன்னிக்காட்டுப் பகுதிக்குள் சென்றனர் *(Madhu Codex, 1886)*. மாந்தைக் கத்தோலிக்கரும் தாங்கள் வழிபட்ட ஆரோக்கிய மாதா திருச்சுரூபத்துடன் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்றனர். இதனை மருதமடுத் திருப்பதிகள் துணை என்னும் நூலும் ஆதாரப்படுத்துகின்றது. மன்னார்-மாதோட்டக் கத்தோலிக்கர் இணைந்து ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களுக்குத் தப்பி மருதமடுக் குளத்திற்கு அண்மையில் தஞ்சமடைந்தனர் (மருதமடு திருப்பதிகள் துணை, 1899,42). மன்னார் மற்றும், மாந்தையிலிருந்து சென்ற மக்கள் மடுக் கிராமத்தில் எந்தக் குருவின் உதவியுமின்றிக் காணப்பட்டனர்.

இதேகாலத்தில், யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் படையினர் கத்தோலிக்கரைக் கடுமையாகத் துன்புறுத்தினர். 1658இல் அருட்பணி. கல்டிரோ (குச. ஊயடனநசழைஇ ளுது) என்னும் இயேசுசபைக் குரு கொல்லப்பட்டார். ஏனைய இயேசுசபைக் குருமார் எல்லோரும் நாடு கடத்தப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கர் மிகவும் துன்புறுத்தப்பட்ட பின்னணியில், அண்ணளவாக 700 பேர் ஏழு குருமாருடன் பூநகரி ஏரியைக் கடந்து வன்னிப் பெருநிலப்பரப்பிற்குச் சென்றுள்ளனர். இவர்கள் மன்னார் மற்றும் மாந்தையிலிருந்து வந்து மடுக்கிராமத்தில் தங்கியிருந்த கிறிஸ்தவர்களுடன் இணைந்து கொண்டனர் (ஆ.ஊ.1886). உள்ளூர்ப் பாரம்பரியத்தின்படி மடுத்திருப்பதியில் ஏழு குருக்கள் தங்கிப் புனிதமான வாழ்க்கை வாழ்ந்து, மக்களுக்குப் பாவமன்னிப்பு அருளடையாளத்தை வழங்கி, திருப்பலி ஒப்புக்கொடுத்துத் தங்களது பணியினால் கலாபனைக் காலத்தில் மடுப்பதியைத் தேடி வந்த மக்களுக்கு ஆறுதல் வழங்கினர். இறை பராமரிப்புக்குத் தங்களைக் கையளித்துப் புனிதமான வாழ்க்கை வாழ்ந்து, பல துன்பங்கள் மத்தியில் அர்ப்பணிப்போடு மக்களுக்குப் பணியாற்றியவர்கள் இறந்த போது மடு ஆலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளனர் *(Chr, 35; D/42, J.B.A)*. இந்த ஏழு குருமாரும் போர்த்துக்கேய பிரான்சிஸ்கன் சபைக் குருமாராக இருக்கலாம்.

மடுக்கிராமத்தில் யோசப் வாஸ் மற்றும் பேத்ரோ பெற்றாவோ அடிகள் மடுஆலயத்தின் முதற் பங்குத் தந்தையான பேத்ரோ பெற்றாவோ அடிகள் மாதோட்டத்தில் எதிர்கொண்ட தனிமை, ஒல்லாந்தரின் கெடுபிடிகள், பிற சமயத்தவர்களின் எதிர்ப்பு மற்றும் கத்தோலிக்கர் தங்கள் சமய ஈடுபாடுகளில் கொண்டிருந்த வேண்டா வெறுப்பு மனப்பாங்கு, கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிரான மூடப்பழக்க வழக்கங்கள் காரணமாக விரக்தியுற்ற நிலையில் 1697இல் மாதோட்டத்தை விட்டு வன்னியின் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்றார் (ஏீனுஇ ஐஇ 139-140). எனினும் எங்கு சென்றார் என இடம் குறிப்பிடப்படவில்லை. இது கிறிஸ்தவர்கள் வாழ்ந்த சிலேனா மடுவாக இருக்கலாம். இதனை அறிந்த யோசப் வாஸ் அடிகள் மடுக் கிராமத்திற்குச் சென்று பேத்ரோ பெறாவோ அடிகளுடன் சிலநாட்கள் தங்கி அவரை ஊக்குவித்துள்ளார் (மேலது. பக்.140).

## பேத்ரோ பெறாவோ அடிகள்

சிலேனா மடுவில் 1701இல் ஓர் ஆலயத்தைக் கட்டியுள்ளார் (மேலது. பக்.213). 1705இல் வன்னியில் ஏழு ஒரற்றோறியன் சபைக்குருமார் ஒன்று கூடி அன்னை மரியாவின் பிறந்த தினத்தை, 08 செப்ரம்பர் 1705இல் பெருவிழாவாகக் கொண்டாடியதுடன் மறுநாள் ஒன்றுகூடிக் கலந்துரையாடி, பணித்தளப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர். மேலும்1705இல் சிலேனா மடுவிலும் மாதோட்டத்திலும் பணியாற்ற பேத்ரோ பெற்றாவோ அடிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது (மேலது. பக்.297). இவர் சிலேனா மடுவிலும் மாதோட்டத்திலும் 25 ஆண்டுகள் மிகக் கடினமாகப் பணியாற்றியுள்ளார். 1711ம் ஆண்டு பாஸ்கு வழிபாடுகள், பாசோ சடங்குகளுடன் வன்னியில் இடம்பெற்றபோது, வன்னி மற்றும் மாதோட்டத்தை அண்டிய ஏனைய இடங்களிலிருந்தும் வந்த மக்கள் பல நாட்கள் அங்கேயே தங்கிப் பாஸ்கா வழிபாடுகளில் கலந்து கொண்டார்கள் (ஏீனுஇ ஐஇ 453).

## மடு பிரபல்யம் பெற்றமைக்கு முன்வைக்கப்பட்ட இரு முக்கிய காரணிகள்

ஆயர் பொஞ்சின் அமதி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய யொண்குவே அமதி *(Fr. R. P. Jonquet, 1910)* அடிகள் பொருத்தமான தொரு வினாவை முன்வைத்துள்ளார். மடுத் திருப்பதியை நோக்கி இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும், தென் இந்தியாவிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூடி வருவதற்கு முக்கிய காரணம் என்ன? இங்குள்ள அன்னை மரியின் புதுமைமிகு திருச்சுரூபமா அல்லது இங்கு பணியாற்றிப் புனிதமான வாழ்வு வாழ்ந்த ஏழு குருக்களும் இங்கு அடக்கம் செய்யப்பட்டதா?".

இந்த இரண்டு காரணங்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களாக ஆயர் யூலெயின் அமதி ஏற்கனவே முன்வைத்திருந்தார். மேலும் மடுத் திருப்பதி பற்றி 1875இல் மன்னார் நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பிலும் மேற்கூறப்பட்ட விடயம், பதிவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயர் போஞ்சினும் இதே விடயத்தைப் பதிவு செய்துள்ளார். அருட்தந்தை றெமேஸ்கிரிச்சன் அமதி

13ஆம் பக்கத் தொடர்ச்சி

*(Fr.P.J.Rommerskirchen)* இலங்கையில் அமலமரித் தியாகிகளின் பணி" *(1931)* என்னும் தமது நூலில் ஆயர் போஞ்சின் கூறிய அக்கருத்தை மேலும் வலியுறுத்தியுள்ளார்.

மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச் சுரூபத்தைத் தேடிவந்து, வழிபட்டுக் காணிக்கை செலுத்திய பக்தர்களின் எண்ணிக்கை காலக்கிரமத்தில் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது இன்றும் தொடர்ந்து அதிகரிக்கின்றது. அதேவேளை குருக்கள் பற்றிக் கூறப்பட்ட மேற்படி கூற்றுகள் சரியாயின், புனிதவாழ்வு வாழ்ந்து மடுவிலேயே புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் குருக்கள் பற்றி ஏன் இன்று எவரும் பேசுவதில்லை? இதனை வரலாற்றுப் பின்னணியில் நோக்கலாம்.

வன்னியின் அடர்ந்த காட்டுச் சூழலில் நிலவிய கடும் வெப்பத்தின் விளைவாகத் தோன்றிய பறங்கி" என்னும் தோலைப் பாதிக்கும் ஒருவகைத் தொற்று நோய்க்கும், இந்தியாவிலிருந்து வேலைக்கு அழைத்து வரப்பட்டவர்களால் பரவிய கொலரா" என்னும் கொடிய தொற்றுநோய் மற்றும் கடும் வறட்சி காரணமாகப் பாதுகாப்புத் தேடிய மக்கள் மேலும், மேலும் காட்டின் உட்பகுதிக்குள் சென்று குடியேறினர். இவ்வாறு தோன்றிய ஒரு குடியேற்றமே தம்பனைக் கிராமமாகும் *(S.A. Gnana Pragasar, 7,8)* மேலும் இவ்வாறு இடம்பெயரும்போது மக்கள் தாங்கள் வழிபட்ட திருச்சுரூபங்களையும் தங்களுடன் எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் தகவல் ஓரற்ரோறியன் குருமார் உரோமைக்கனுப்பிய அறிக்கைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. வன்னியிலும் மாதோட்டத்தின் சில இடங்களிலும் நிரந்தரமான ஆலயங்கள் இல்லை. தொடர் வறட்சியால் வேளாண்மை பொய்த்த வேளையில், மக்கள் தாங்கள் வழிபட்ட திருச்சுரூபங்களுடன் ஓரிடத்திலிருந்து வேறு இடங்களைத் தேடிச் சென்றுள்ளனர் *(Chr., 97: .* இவ்வாறே மடுமாதா புதுமைமிகு திருச்சுரூபம் கள்ளிக்கட்டைக் காட்டிற்குச் சென்றிருக்கலாம் என அன்ரனயினஸ் அடிகள் கூறியுள்ளார் *(Chr.,97). 1817-1828* காலப் பகுதியில் ஆலயம் முற்றாகச் சேதமடைந்த நிலையில் புதுமைமிகு திருச்சுரூபம் கள்ளிக் கட்டைக்காட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது (ஊாச.இ 98 னு.100 துயுு). 1863இல் அருட்பணி புசாக்கு அமதி மடு ஆலயத்திற்குப் பொறுப்பாகப் பணியாற்றியபோது அடம்பன்மோட்டை, காத்தான்குளம் புனித சூசையப்பர் ஆலயத்திற்கு மடுமாதா திருச்சுரூபத்தை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார் *(Chr., 155: D.51 JBA).*

பிரிவினை வாதக்குரு பிரான்சிஸ்கோ யுவான் மடு ஆலயத்தில் பிரச்சினை ஏற்படுத்திய காலத்தில் புதுமைமிகு திருச்சுரூபம் மடுவிலிருந்து மாதோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது பற்றி விவியர் அமதி அடிகள் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். எனினும் மாதோட்டத்தில் எந்த ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது எனக் குறிப்பிடவில்லை. இது அடம்பன்மோட்டையாக இருக்கலாம் என அன்ரனையினஸ் அடிகள் குறிப்பிட்டுள்ளார் *(Chr., 135; D.87 J.B.A).* ஒரு காலத்தில் ஆலயம் இருந்த இடத்தில் சிறு கொட்டில் ஆலயம் மட்டும் இருந்துள்ளது மக்கள் தங்கள் காணிக்கையை அருகிலிருந்த மரப்பொந்தில் இட்டுள்ளார்கள் *(Chr., 98).* ஆலயம் இல்லாத காலத்திலும் திருச்சுரூபமானது எப்பொழுதும் மக்களுடனே இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது. புதுமைமிகு திருச்சுரூபம் பற்றிய விடயங்கள் இவ்வாறிருக்க, அருட்தந்தையர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தையும், குருக்களையும் நீண்டகால இடப்பெயர்வுகள் காரணமாகக் காலக்கிரமத்தில் மக்கள் படிப்படியாக மறந்திருக்கலாம்.

## 1876இல் இடம்பெற்ற மணிமுடி சூட்டு நிகழ்வு

மடுக்கிராமத்தில் சிறு கொட்டிலாக இருந்த ஆலயத்திற்குப் பதிலாகப் பெரிய ஆலயம் கட்டுவதற்கு 08 யூலை 1872இல் ஆயர் போஞ்சின் அமதி அடிக்கல் நாட்டினார். எனினும் ஆயரின் இம்முயற்சிக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பிய போதும் இறுதியில் ஆயரின் முயற்சி வெற்றி பெற்றது. இது மருதமடு அன்னையின் பரிந்துரையால் கிட்டிய ஆசீர் என்பது ஆயரின் உறுதியான நம்பிக்கை. எனவே, மருதமடு அன்னையின் பரிந்துரையால் பெற்ற இந்த மாபெரும் ஆசீருக்குப் பிரதியுபகாரமாகத் தமது நன்றியை வெளிப்படுத்த 02 யூலை 1876, ஆயர் போஞ்சின் அமதி மருதமடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்குப் பெறுமதி மிக்க இரத்தினக் கற்கள் பதித்த சிறந்த கலையம்சங்களைக் கொண்ட தங்க மணி முடியைச் சூட்டினார் (ஆபச. ஃழுெ தநயடெ டில துழனெரநவஇ 243). இந்த நிகழ்வு அமைதியான முறையில் இடம்பெற்றது.

## மணிமுடி சூட்டுவதற்கு ஆயர் புறோ அமதி மேற்கொண்ட முயற்சிகள்

யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக 25 ஆண்டுகள் பணியாற்றி, மடுத்திருப்பதியில் வழிபாடுகளிலும் உட்கட்டமைப்பிலும் பல முற்போக்கான மாற்றங்களுக்குத் துணை நின்ற ஆயர் கென்றி யூலெயின் அமதி அவர்கள் தமது காலத்திலேயே மருதமடு மாதாவின் திருச்சுரூபத்திற்கு வெகு விமரிசையாக மணிமுடி சூட்டு நிகழ்வை மேற்கொள்ள நீண்ட நாட்களாக பேராவலாயிருந்தார். எனினும் இறைவனின் திருவுளம் வேறுவிதமாக இருந்தது. ஆயர் கென்றி யூலெயின் 07 பெப்ரவரி 1919இல் இறைபதமடைய, 24 பெப்ரவரி 1920 ஆயர் யூல்ஸ் அன்று புரோ அமதி யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார்.

இந்நிலையில் கத்தோலிக்கத் திரு அவையின் மரபுப்படி ஒரு நாட்டின் ஆயர் மன்றத்தினர் குழுவாகவும், தனியாகவும் திருத்தந்தையைச் சந்தித்துத் தங்கள் வணக்கத்தையும் கீழ்ப்படிவையும் செலுத்தும் (யுன டுஐஅஐெ எளைவை) நிகழ்வு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும். 07 ஏப்ரல் 1921இல் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆயர் புறோ அமதி திருத்தந்தையைச் சந்தித்த போது மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்குமணிமுடி சூட்டுவதற்குத் திருத்தந்தையின் சிறப்பு அங்கீகாரத்தைப் பெற்றார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இத் திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டுவதற்கு ஆயர் புறோ நன்கு திட்டமிட்டு, சிறந்த பல முன் ஆயத்தங்களை மேற்கொண்டார். 11 பெப்ரவரி 1922இல் ஆயர் புறோ தமது மறை மாவட்ட அருட்பணியாளர்கள், துறவியர் மற்றும் மக்களுக்கு எழுதிய முதலாவது திருத்தூது மடலில், மடு ஆலயத்தின் வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு மருதமடு மாதாவின் திருச்சுரூபத்திற்கான மணி முடிசூட்டு நிகழ்விற்குத் தாம் மேற்கொள்ளத் திட்டமிட்ட ஆயத்தங்களையும் விரிவாக விளக்கியுள்ளார். ஆயரின் அருட்பணி மடலிலிருந்து சில கருத்துகளை முன்வைப்பது பொருத்தமானது.

எங்கள் முதல் அருட்பணி மடலில் நாம் உரோமாபுரி நகரிலிருந்து திரும்பியவுடன் மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச் சுரூபத்திற்கு மணிமுடி சூட்டத் திட்டமிட்டமை பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். எமக்கு முன்பு பணியாற்றிய ஆயர் யூலெயின் அமதி அவர்களின் எதிர்பார்ப்பும் இந்நிகழ்வை விரைவாகவும், சிறப்பாகவும் நிறைவேற்ற வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. நாமும் ஆயராக நியமனம் பெற்றது முதல் இந்த நிகழ்வை மிகவும் விமரிசையாகவும் பக்தியுடனும் நிகழ்த்தப் பேராவல் கொண்டிருந்தோம். இதனால் நாம் திருத்தந்தையிடம் பெற்றுக் கொண்ட சிறப்புச் சலுகையின் அடிப்படையில், இலங்கைக்கான திருத்தந்தையின் பதிலாள், 02 யூலை 1922இல் மருதமடு மாதாவின் திருச் சுரூபத்திற்கு மணி முடி சூட்டுவார் என்னும் செய்தியை உங்களுக்கு மகிழ்வுடன் அறிவிக்கின்றேன். இதற்கென நாம் விடுத்த கோரிக்கைக்கு 07 ஏப்பிரல் 1921இல் இலங்கைக்கான திருத்தந்தையின் பதிலாள் (ளுநடநயவந யிழளவழடைஉ) அவர்களுக்குத் திருத்தந்தையின் பெயரால் திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டும் நிகழ்வை நடத்துவதற்குத் திரு ஆட்சிப் பீடத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த அறிவிப்பு மடுமாதாவின் பக்தர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியாக அமையும்.

ஆரம்பகாலம் முதல் இங்கு தேவஅன்னை மட்டில் பக்தி நிலைத்துள்ளது. இந்த வருடம் மற்றுமோர் முக்கிய வரலாற்று நிகழ்வை நினைவு கூரும் ஆண்டாக விளங்குகின்றது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 8 செப்ரம்பர் 1622இல் யாழ்ப்பாண அரசு பரிசுத்த கன்னி மரியாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இதே நாளில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராட்சியத்தை வானக அரசிக்கு அர்ப்பணித்து மரியன்னையை விண்ணகப் பாதுகாவலியாகப் பிரகடனப்படுத்தினர். இந்த அர்ப்பண விழா யாழ்ப்பாணக்கோட்டையின் மேற்குத் திசையில் அமைந்துள்ள ஆலயத்தினுள் இடம்பெற்றது.

இப்பின்னணியில், 1921 ஆகஸ்ற் 23, 24ம் திகதிகளில் மடுஆலயத்தில் தங்கியிருந்த ஆயர் புறோ அமதி மடுமாதாவின் மணிமுடியைச் செப்பனிட்டு, அழகுபடுத்தி மெருகூட்டுவதற்கு அதனை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் சென்றார். இம்மணிமுடி சூட்டு விழா 02 யூலை 1922இல் நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நன்றி : மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு மலர்

(தொடரும்)

# மரியாவின் திருத்தலங்களுக்கான திருப்பயணம்

**மெற்றகொரியில்** அமைதியின் அன்னை, **இத்தாலி** லோறேற்றாவில் மரியாவின் பறக்கும் வீடு, **பிரான்சின்** லூர்து திருத்தலம், **போர்த்துக்கல்லில்** பத்திமா திருத்தலம் இவற்றோடு **பதுவையில்** தூய அந்தோனியார் திருத்தலம், **ரோமையில்** உலகப்புகழ் பெற்ற 5 பேராலயங்கள் வத்திக்கான் உட்பட திருந்தந்தையுடன் செபவழிபாடு, **கொலோசியம்,** ரோமையில் பல ஏக்கர்களில் மறைக்காய் மரித்த ஆயிரக்கணக்கான இறையடியார்களின் நிலத்தடி கல்லறைக் குகைகள் இன்னும் பல புனிதமான இடங்கள்



# Pilgrimage to Marian Shrines

*Including Rome -Vatican - Padua - Venice*

**May 2025 (15 days)**

**Days of Reflection and Prayers. Time to relax and visit the Holy Places with the spiritual guidance. Receive God's blessing in an abundant way**







For More Information: Please call Phillip Anantham Antony at
**Tel: 647 280 8984**
**E-mail: antonymaha@gmail.com**



Departure from Toronto Pearson International Airport to Dubrovnik (Croatia)

Arrival at Madjugorjee

Visit Blue Mountain and White Cross. Possibility of meeting the Visionaries who receive message from Our Lady continuously Departure from Medugorje to Italy Via Adria c Sea –through Split to Ancona

May Arrival in Ancona – Visit Holy House of Lore a- Mary's House Carried by Angels from Nazereth to Lore a and Proceed to Paduva by Luxury Coach Day in Padua and Holy Mass St. Antony's Shrine.

In Rome Special Audience with Pope Francis and Prayer Service. Afternoon, Visits to 5 Big Basilicas in Rome and Colosseum the World famous places.

Visit to Catacomb and Proceed to Lourdes by Air
Arrive at Lourdes 2 full day Programme with Liturgy, Bath in the Lourdes Water, Way of the Cross on the Mountain, Holy Hour, Visit Bernadette's Home etc Film on Lourdes

Leaving for Fatima

Arrive in Fatima Shrine in Portugal and Programme with Liturgy, Visiting the places where Our Lady's appearances took place day of reflec ons in Fatima – latest film on Fatima and famous Museum and with lot of Activities

Departure from Lisbon Airport to Toronto ( Arrival at PIA in Toronto)

## மரியாவின் திருத்தலங்களுக்கான திருப்பயணத்தின் விபரங்கள்

ரோரன்ரோவிலிருந்து ஆரம்பம் **மெற்றக்கொரியை** அடைதல்

மெற்றக்கொரி திருத்தலத்தில் 4 நாட்கள் (இன்றைய நாட்களிலும் மரியன்னை தோன்றி ஆறு காட்சியாளர்களுக்கு இறைவனின் செய்தியை வழங்குகிறா. அவர்களை பார்க்கவும், அவர்கள் உரையை கேட்கவும் சந்தர்ப்பம் உண்டு)

**இத்தாலி** நோக்கி பயணம்

**அங்கோனாவை** அடைதல். மரியா வாழ்ந்த வானதூதர்களால் காவிச் செல்லப்பட்ட வீடு வைக்கப்பட்டிருக்கும் ஆலயம். **லொறேற்றா ஆலயத்தை** தரிசித்த **பதுவை** நோக்கி பயணம்

பதுவை **அந்தோனியார் ஆலயத்தில்** திருப்பலி. ரோமை நோக்கிப் பயணம்

**ரோமையில் திருந்தந்தை பிரான்சிசுடன்** செபவழிபாட்டில் பங்கு பெற்றவும் மிக அருகில் அவரைப்பார்க்கவும் வாய்ப்பு உண்டு. **தூய பேதுரு** பேராலயம், திருத்தந்தையர்களின் கல்லறை, அத்தோடு ரோமையிலுள்ள 5 ஆழகான பேராலயங்களையும் தரிசிக்கவும், லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் 1ஆம் 2ஆம் நூற்றாண்டுகளில் வேதசாட்சிகளாக மரணித்து பல ஏக்கர் பரப்புக்களின்
நிலத்தடியில் புதைக்கப்பட்ட *(Catacombs)* தூய இடங்களை தரிசித்தல். **கொலோசியம்** உட்பட


**லூர்து திருத்தலம்** நோக்கி விமானத்தில் பயணம். பிரான்சில் லூர்து அன்னை திருத்தலத்தில் 3 நாட்களும் பல விதமான பக்தி முயற்சிகள், திருப்பலி, சிலுவைப்பாதை, இரவில் மெழுகுதிரி தாங்கிய சுற்றுப்பிரகாரத்தில் பங்குகொள்ளுதல்,

**தூய பேர்னடேற்** வாழ்ந்த இடங்களை தரிசித்தல், புதிதாக **லூர்து திருத்தலத்தைப்** பற்றி வெளியிட்ட திரைப்படம், அரும்பொருள் காட்சிசாலையை பார்வையிடல்.

**பார்த்துக்கல் பத்திமா அன்னையின்** திருத்தலத்தில் 3 நாட்கள் பல விதமான பக்தி முயற்சிகள், திருப்பலி, சிலுவைப்பாதை, இரவில் மெழுகுதிரி தாங்கிய சுற்றுப்பிரகாரத்தில் பங்குகொள்ளுதல். பத்திமா அன்னை காட்சி கொடுத்த இடங்கள், காட்சி பெற்றவர்களான **தூய யசிந்தா, லூாசியா, பிரான்சிஸ்கோ** கல்லறைகளை தரிசித்தல். இத்திருத்தலத்திற்க்கு திருத்தந்தையர்கள், அரச பரம்பரையினர் வழங்கிய விலை மதிப்பான பொருட்களை கொண்ட அரும்பொருள் காட்சிசாலையை பார்வையிடல். பத்திமாவில் அன்னை காட்சிகொடுத்த வரலாற்றை பற்றிய திரைப்படம்.








திருப்பயண நாட்கள் ஒரு சிறப்பான ஆன்மீக பயணத்தின் சிறப்பான அனுபவம். இறைவனோடு, மரியாவின் அன்பிலும் அவவின் பரிவிலும் வாழும் இந்நாட்களை வாழ்வில் ஒரு பொழுதிலும் மறக்கமாட்டீர்கள். அனைத்து வசதிகளும் உங்களின் எதிர்பார்ப்புகளுக்கு மேலாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விமானச்செலவு (விமான நிலைய வரி 750 டொலர்கள் உட்பட) 6 நாடுகளுக்கான பயணம், காலை மாலை உணவுகள், தங்கு விடுதி, காட்சியக அனுமதி அனைத்தும் 15 நாட்களுக்கு 3900 டொலர்கள் மட்டுமே. (பெப்ரவரி 1ஆம் ஆம் திகதிக்கு முன்னர் 2000 டொலர்களும் ஏப்ரல் 15 க்கு முன்னர் 1900 டொலர்களும் செலுத்த வேண்டும். மேலும் விபரங்களுக்கு அழையுங்கள் அன்ரன் பிலிப்

**Package includes Air Travel, All Local Travel, 4 Star Hotel Accommoda on with double occupancy, Breakfast and Dinner, All entrée fees, Always Guided Tours and Explana ons. Services in English and Tamil. Not included: Lunch, Medical Insurance, ps Total Price Can$ 3,900. ($ 2,000 to be paid before February 1st and $1,900, to be paid before April 15th.)**
**Please call Philip Anantham Antony at 647 280 8984 or email antonymaha@gmail.com.com**




மேலும் விபரங்களுக்கு அழையுங்கள் பிலிப் ஆனந்தம் அன்ரனி
**Tel: 647 280 8984**
**Emial: antonymaha@gmail.com**

# மடுமாதா மருத்துவமனை




இலங்கை வடமாகாணத்தில் மன்னார் மாவட்டம் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாகவும்,பல அபிவிருத்தி திட்டங்களில் புறக்கணிக்கப்பட்டஒரு பகுதியாகவும் காணப்படுகின்றது. சம காலத்தில் மன்னாரில் காணப்படுகின்ற பல வளங்கள் திட்டமிடப்பட்டு சூறையாடப்படுகின்ற நிகழ்வுகளும் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.


This is the temporary Madhu Maathaa Hospital


தற்காலிக மருத்துவ மையம்

போரிற்கு பின்னரான காலப்பகுதியில் மன்னார் மாவட்டம் மருத்துவ சேவையை பொறுத்தளவில் மிகவும் பின் தங்கியதாக காணப்படுகின்றது. பிராந்திய சுகாதார பணிப்பாளரின் அறிக்கையின்படி நிறுவனரிதியாகவும், உள்கட்டமைப்பு வசதிகளும், ஆய்வகம், நோய் அறிதல், மற்றும் தேவையான மருத்துவ உபகரண வசதிகளும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நோயாளிகள் பல நூறு மைல்களுக்குச் சென்று தமக்கான மருத்துவ சேவையை பெறவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யேசேப்பு அவர்களினால் ஏற்கனவே முன்மொழயப்பட்ட மருத்துவ நிலையம் அமைப்பதற்கான திட்டம் தற்போதய ஆயர் இம்மானுவேல் பெர்னான்டோ அவர்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதன் அடிப்படையில் ஏற்னவே ஆரம்பிக்கபட்டிருந்த போரினால் பாதிக்கப்பட்டு உடல் அங்கங்களை இழந்தவர்களுக்கான செயற்கை அங்கங்களை பொறுத்துகின்ற*(Artificial limb fitting centre)* நிலையத்தோடு இணைந்து வெளிநோயாளர் பிரிவாக மடுமாதா வைத்திய நிலையம் என்ற பெயரில் மன்னார் மறைமாவட்டத்தில் வைத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வைத்திய நிலையம் இலாப நோக்கமின்றி பல்வேறு சிரமங்கள் மத்தியில் தூர இடங்களுக்கு மருத்துவ சேவைக்காக செல்லுகின்ற மக்களையும், அவ்வாறு செல்ல முடியாமல் இருக்கின்ற மக்களையும் கருத்திலே கொண்டு மருத்துவ செயல்பாடுகள் நடைபெறுவதால் பலர் இந்த மருத்துவமணை ஊடாக நன்மைகளைப் பெற்று வருகின்றனர்.

மக்களுடைய மருத்துவ தேவைகள் அதிகமாக இருப்பதாலும், இப்பொழுது வைத்திய நிலையம் இயங்குகின்ற இடம் பல குறைபாடுகளோடு இருப்பதாலும் புதியதொரு வைத்திய நிலையத்தை கட்டவேண்டிய தேவையை உணர்ந்து புதிய வைத்திய நிலையத்திற்கான கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த கட்டுமான வேலைகள் நிறைவடைகின்றபோது தேவையான வைத்திய உபகரணங்களோடு வெளிநோயாளர் பிரிவும், உள்நோயாளர்கள் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டு மக்களுக்கான முழுமையான மருத்துவ சேவையை வழங்க முடியும் என எதிர்பார்க்கின்றோம். இலங்கையில் தற்போது இருக்கின்ற பொருளாதார நெருக்கடிகள் மத்தியில் இந்த வேலைகளை நிறைவு செய்வதில் பல பின்னடைவுகள் ஏற்ப்பட்டிருக்கின்றது. எனவே பலருடைய நன்கொடைகளையும் பொருளாதா உதவிகளையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
**1. மேதகு ஆயர் இம்மானுவேல் பெர்னான்டோ, மன்னார் மறைமாவட்டம், மன்னார். - 94777281591**
**2. அருட்தந்தை. அருள்ராஜ் குரூஸ் - 94706623660**

**Bank details**
**Name of the bank: Commercial bank of Ceylon PLC (code 7056)**
**Address: No.45, Main street,Mannar**
**Name of the A/C: Madhu Matha Medical Centre**
**AC No: 1000486948**
**Branch: Mannar (Code 00154)**
**Swift code: CCEYLKLX**
**Rev.Fr. Arulraj Croos,**
**Director,**
**Madhumatha hospital**
**Mannar**


மருத்துவமனையின் தற்போதைய நிலை

கனகத்தூதன்
CanaCaThuthan

# வன்முறைகளின் அதிகரிப்பு குறித்து திருத்தந்தை ஆழ்ந்த கவலை




ஏவுகணை தாக்குதலுக்கு உள்ளான குழந்தைகள் மருத்துவமனை

உக்ரைன் நாட்டின் கீவ் நகரில் மிகப்பெரும் குழந்தைகள் மருத்துவமனை உட்பட இரு மருத்துவ மையங்கள் தாக்கப்பட்டது, மற்றும் காசாவின் கல்வி நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து திருத்தந்தை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக திருப்பீடச் செய்தி தொடர்பகம் அறிவித்துள்ளது.

ஜூலை 9ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று இதனைத் தெரிவித்த திருப்பீடச் செய்தி தொடர்பகம், வன்முறைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவது குறித்து மிக ஆழமான முறையில் கவலை கொண்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உயிரிழந்தவர்கள் மற்றும் காயமுற்ற அப்பாவி மக்களுக்காகவும், மோதல்கள் முடிவுக்கு வருவதற்கான வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றும் செபிப்பதாகவும் தெரிவித்துள்ளது.
காசா பகுதியிலுள்ள *Holy Family* கத்தோலிக்கப் பள்ளி இஸ்ராயேல் துருப்புக்களால் ஜூலை 7ஆம் தேதி தாக்கப்பட்டதில், அதில் அடைக்கலம் தேடியிருந்தோரில் 4 பேர் உயிரிழந்தனர்.
உக்ரைனின் கீவ் நகரில் ஜூலை 8, திங்களன்று இரஷ்ய துருப்புக்களால் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் அந்நாட்டின் மிகப்பெரும் குழந்தைகள் மருத்துமனை 60 முதல் 70 விழுக்காடு சேதமடைந்துள்ளது.
இந்த ஏவுகணைத் தாக்குதலில் அம்மருத்துவமனைக்கு அருகில் இருந்த மருத்துவ மையமும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

# திருத்தந்தையின் உலகளாவிய செபக் கூட்டமைப்பு



ஜூலை8 திங்கள்கிழமை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருத்தந்தையின் உலகளாவிய செபக் கூட்டமைப்பு அறக்கட்டளைக்கான சட்டங்களை வரையறுத்துள்ளார்.
நான்கு தலைப்புக்களில் ஏறக்குறைய 18 இயல்களில் சட்டங்கள் பலவற்றை வரையறுத்துள்ளார் திருத்தந்தை. அவ்வகையில் முதல் தலைப்பில் பெயர், தலைமையகம், அமைப்பின் தன்மை மற்றும் நோக்கம் பற்றியும், இரண்டாவது தலைப்பில் நிர்வாகக்குழுவின் உறுப்பினர்கள், அவர்களின் பணி, கால வரையறை பற்றியும், மூன்றாவது தலைப்பில், சொத்துக்களின் நிர்வாகம் பற்றியும், நான்காவது தலைப்பில் இயக்குநர் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை பற்றியும் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

1844ஆம் ஆண்டு இயேசு சபை அருள்பணியாளர் *Franiois-Xavier Gautrelet* என்பவரால் பிரான்சில் உருவாக்கப்பட்ட இக்கூட்டமைப்பானது தொடக்கத்தில் இயேசு சபை பயிற்சி நிலையிலுள்ள இளையோருக்காக உருவாக்கப்பட்டது. நாளடைவில் அது திருத்தந்தையின் செபக்கருத்தை உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் உலகளாவிய செபக் கூட்டமைப்பாக மாறியது. தற்போது பல்வேறு பகுதிகளில் உள்ள 1கோடியே30 இலட்சம் நபர்களை கிளிக் டு ப்ரே (*click to pray*) என்ற செயலி மற்றும் சமூகவலைதளத்திலும் வாடிக்கையாளர்களாகக் கொண்டுள்ளது.
1915ஆம் ஆண்டு அதன் இளையோர் பிரிவானது நற்கருணை சிலுவைப்போர் இயக்கமாக இளையோர் நற்கருணை இயக்கமாக பிறந்தது.

கடந்த ஆண்டுகளில் திருத்தந்தை 13ஆம் சிங்கராயர், ஒன்பதாம் பத்திநாதர் ஆகியோரால் இக்கூட்டமைப்பிற்கான சட்டங்களில் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# திருத்தந்தை பிரான்சிஸ் நம் அனைவருக்குமான தந்தையாக இருக்கின்றார்



செனகல் மற்றும் காம்பியாவைச் சேர்ந்த புலம்பெயர்ந்தோர் குழுவையும், புதிய புகலிடத்தை தேடும் பாதையில் புலம்பெயர்த்தோரின் துயரங்களை நூல்லில் பதிவுசெய்துள்ள அவற்றின் இரண்டு இளைய ஆசிரியர்களையும் திருத்தந்தை பிரான்சிஸ் ஜூலை தனது சாந்தா மார்த்தா இல்லத்தில் சந்தித்தாக செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.
இந்தப் புலம்பெயர்ந்தோர் குழுவைத் தலைமையேற்று திருத்தந்தையிடம் அழைத்துச்சென்ற அருள்பணியாளர் *Dona Mattia Ferrari*, இந்தச் சந்திப்புக் குறித்துக் கூறியபோது, ஒரு சிறந்த ஆயராகவும், தந்தையாகவும் தான் திருத்தந்தையை கண்டதாகக் கூறியுள்ளார்.
மேலும், திருத்தந்தை பிரான்சிஸ், அப்புலம்பெயர்ந்தோரின் வலிநிறைந்த கதைகளைக் கேட்க விரும்புவதாகவும், அவர்கள் செய்யும் செயல்களுக்கும் வாழும் முறைகளுக்கும், நன்றி தெரிவிப்பதாகவும், இந்தவழியில் அவர்கள் தொடர்ந்து பயணிக்க அவர்களைத் தான் ஊக்குவிக்க விரும்புவதாகவும் கூறியதாக அருள்பணியாளர் விவரித்துள்ளார்.
ஏழைகளையும், புலம்பெயர்ந்தோரையும் நாம் காப்பாற்றும்போது அல்லது வரவேற்கும்போது, அவர்கள்தான் நம்மைக் காப்பாற்றுகிறார்கள் என்றும் ஒருவர் ஏழைகளுடனும், புலம்பெயர்ந்தோருடனும் வாழும் அன்பிலும், உடன்பிறந்த உறவிலும், உண்மையிலேயே மீட்பை அனுபவிக்கிறார் என்றும் அருள்பணியாளர் *Mattia* சுட்டிக்காட்டினார்.

# செபத்தில் வளர்வோமா? ஓர் உளவள ஆன்மீகப் பயணத்தில் எனது தேடல்

கரவையூர்ச் செல்வம்



## முன்னுரை

இந்த ஆண்டை (2024) ஒரு செப வேண்டுதல் ஆண்டாக எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய போப் பிரான்சிஸ் பிரகடனப்படுத்தியுள்ளார். கேட்டதும் ஓர் எதிர்வினை (சநயஉவழைெ) ஏன், வேறேதும் கிடைக்கவில்லையா? இன்று உலகத்திற்கு இதுதான் தேவையா? இவ்வளவுக்கும் அண்மைக்கால வருடங்களாக நான் செபத்தில் சிறிதளவு ஈடுபாடு கொள்ள ஆரம்பித்துள்ளேன். சில வழிகளைத் தேடினேன். தேடிய பாதையில் பயணிக்க ஆரம்பித்தேன். இந்தப் பின்புலத்தில் ஏன் இந்த எதிர்வினை? புரியவில்லை! ஒருவேளை போப் பிரான்சிஸ் அவர்கள் பிரகடனப்படுத்திய கையோடு சில சலசலப்புக்கள் தோன்றின. ஒருவேளை இவைதான் எனது எதிர்வினைக்குக் காரணமாக இருக்கலாம். இயேசு ஓர் உவமை சொன்னார். தந்தை தனது மூத்த மகனைத் தோட்டத்தில் வேலை செய்யப் போகுமாறு கேட்டார். அவன் மாட்டேன் என்றான். பின்பு மனம்மாறி (மனம் திருந்தி என்று நான் சொல்லவில்லை) தோட்டம் சென்று வேலை செய்தான். இளையவனோ உடனே செய்வேன் என்றான். ஆனால், செய்யவில்லை. அதிகமான சந்தர்ப்பங்களில் நான் மூத்தவன் போலவே செயற்பட்டுள்ளேன். சில நாட்களின் பின், நானும் மனம்மாறி பொருத்தமான ஒரு பொருள்தான் இன்றைய உலகிற்கு தேவையான தொன்றுதான் என்று முடிவு செய்தேன். எழுத்தென்னும் தோட்டத்திற்கு வேலைக்கு வந்தேன். எனது தேடலின் ஒரு பகுதியை நான் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## பார்த்துப் பழகல்

நான் சிறுவயதில் எனது தாய், தந்தையர் குடும்ப செபமாலை சொல்லும் பொழுது, அவர்களைப் பார்த்து நானும் சிலுவை அடையாளம் போடுவேன். அவர்களைப் பார்த்து நானும் கைகூப்பி மாதா சிலையையும் திரு இதயநாதர் சிலையையும் பார்த்துக் கொஞ்ச நேரம் முழந்தால் போட்டு இருப்பேன். பின்பு அம்மா அப்பாவைப் பார்ப்பேன். அப்பொழுது, அம்மா சிலைகளைக் காட்டி அங்கே பார் என்று கையாலேயே சுட்டிக் காட்டுவார். இதுதான் எனது செபவாழ்வின் தொடக்கம். யேம்ஸ் பவுளர் இக் கட்டத்தைப் பார்த்துப் பழகும் செபம் (ஐஅஅவையவளைந ீசயலநச) என்று தனது நூலில் குறிப்பிட்டார். (குயவைா ஹுநளநடழிஅநவெ) பின்னர் கேட்ட செய்தி.

## வாய்ச் செபம்

அப்பொழுது பிரியத்த மந்திரம் என்னும் செபத்தை அம்மா சொல்லித் தந்தார். நானும் மனப்பாடம் செய்து செபித்தேன். அடுத்தபடியாக பரலோக மந்திரம் என்ற மந்திரத்தை அம்மா சொல்லித் தந்தார்கள். நானும் மனப்பாடம் செய்து செபித்தேன். நானும் வளர வளர நீண்ட நீண்ட செபங்களை நான் சொல்லிச் செபித்து வளர்ந்தேன். இதையே வாய்ச் செபம் என்று அழைக்கிறார்கள்.

## மகிமைப்படுத்தல்

கடவுளை மகிமைப்படுத்தும் செபங்களையும், பாடல்களையும் செபிக்கவும், பாடவும் ஆரம்பித்தேன். இந்த மகிமைப்படுத்தும் செபங்கள் பெரும்பாலும் இரவல் வாங்கியே செபித்தேன். அதேவேளை அப்படிப்பட்ட ஒரு வாய்ச் செபத்தில் அதிருப்தி தோன்ற ஆரம்பித்தது. அதிருப்தி வெறுப்பல்ல, சலிப்பல்ல, வேண்டாமென்பதல்ல. அதிருப்தி, ஏதோ ஒரு குறையிருப்பதன் உணர்வு. அர்த்தமில்லாதது போன்ற ஒரு தோற்றம். இந்த அதிருப்தி மனமாற்றத்திற்கு ஒரு வழி. இந்த அதிருப்தி வேண்டியது. இது வளர்ச்சிக்கு வேண்டிய ஒன்று. அதிருப்தியில் நான் மாற்றுவழியைத் தேட ஆரம்பித்தேன்.

இந்தக் கட்டத்தில், தோமஸ் மேரட்டனின் வார்த்தைகள் என்னைச் சிந்திக்க வைத்தன. அவர் எழுதினார்: ஒரு மரம் மரமாக நின்று கடவுளை மகிமைப்படுத்துகின்றது. ஒரு மலர் மலராக இருந்து கடவுளை மகிமைப்படுத்துகின்றது. இவர் என்ன சொல்ல வருகின்றார்? அதாவது ஒரு மரம் தான் வேறொரு மரமாகவோ அன்றேல் ஒரு மலராகவோ நின்று கடவுளை மகிமைப்படுத்தவில்லை. அதேபோன்று ஒரு மலர் தான் இன்னோர் மலராகவோ அன்றேல் காயாகவோ கனியாகவோ நின்று கடவுளை மகிமைப்படுத்தவில்லை. இந்த மலராகவே நின்றுதான் கடவுளை மகிமைப்படுத்துகின்றது. இதையே இன்னமும் விரிவாகச் சொன்னால், ஒரு கோழி, இந்தக் கோழியாகவே நின்று கடவுளை மகிமைப்படுத்துகின்றது. தான் ஒரு மயிலாக மாறி தோகை விரித்து ஆடிக் கடவுளை மகிமைப்படுத்த வேண்டுமென்று ஆசைப்படவில்லை. ஆதங்கம் கொள்ளவில்லை.

ஆனால் மனிதனோ ஒன்றில் தான் வேறொருவனாக அல்லது வேறொருத்தியாக நின்றுதான் கடவுளை மகிமைப்படுத்த முயலுகின்றான், முயலுகிறாள். உண்மையிலேயே அவன் - அவள் சந்நியாசியாக இல்லையென்றாலும் சந்நியாச வேடம் போட்டுக் கடவுளை மகிமைப்படுத்துகின்றான். முகமூடிகள் போட்டுக்கொண்டு கவசங்கள் அணிந்து கொண்டு கடவுளை மகிமைப்படுத்துவது பரிசேயத்தனமானதல்லவா? யாரோ எழுதிய செபங்களையும், யாரோ எழுதிய பாடல்களையும் பயன்படுத்திக் கடவுளை மகிமைப்படுத்தலாமா? இப்படிப்பட்ட செபங்களிலும் பாடல்களிலும் நான் எங்கே? வளரவில்லையே!
பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் சொல்லுகின்றார்: நான் குழந்தையாய் இருந்தபோது குழந்தையைப் போலப் பேசினேன். குழந்தையின் மனநிலையைப் பெற்றிருந்தேன். குழந்தையைப் போல எண்ணினேன். நான் பெரியவனானபோது குழந்தைக்குரியவற்றை அறவே விட்டு விட்டேன். (1கொரி. 13:11). இவ்விடத்தே பவுல் தன்னைப் பற்றியே சொல்வது போல உள்ளது. தனது திருமுகங்களில், பவுல் ஆங்காங்கே தன்னையிட்டு எடுத்துரைத்துள்ளார். இந்தப் பதின்மூன்றாம் அதிகாரத்தில் பவுல் அன்பையிட்டு விரிவாக எழுதுகிறார். அன்பின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கிறார். இடையே மேற்கூறியதை (மேற்கோள்) ஒரு இடைச் செருகலாகச் செதுக்கியுள்ளார். இந்தக் கூற்று கவனிக்கப்படவேண்டிய ஒன்று.
நான் குழந்தையாய் இருந்தபொழுது குழந்தையைப் போலப் பேசினேன். குழந்தையின் மனநிலையைப்



பெற்றிருந்தேன். குழந்தையைப் போல எண்ணினேன். குழந்தையைப் போல அன்பு செய்தேன். குழந்தையைப் போல அன்பை அனுபவித்தேன். ஆனால், நான் பெரியவனானபொழுது, வளர்ந்தவனான பொழுது குழந்தைக்குரியவற்றை அறவே முற்றாக விட்டுவிட்டேன். பின்னடைவு கொள்ளவில்லை. எங்களில் வளர்ந்தோர் பவுல் சொன்னதைப் போல சொல்ல முடியுமா? நீங்களும் நானும் குழந்தைத் தனத்தை, குழந்தைக்குரியவற்றை அறவே, முற்றாக விட்டுவிட்டோமா? அல்லது உடலால் அறிவால் வளர்ந்திருந்தாலும் அவ்வப்பொழுது குழந்தைத் தனத்திற்கு குழந்தையின் மனநிலைக்கு பின்னடைவு கொள்ளுகின்றோனா? நீங்கள் அன்பு செய்யும் வகை யைப் பாருங்கள். உங்கள் உறவுகளைப் பாருங்கள். இதென்னய்யா! செபத்தைப் பற்றி எழுதாமல், வேறொங்கோ போறாரே என்று வாசகர் நினைக்கலாம். பொறுமையாகத் தொடர்ந்து படியுங்கள். இக்கட்டுரையின் தலைப்பை மீண்டும் ஒரு முறை படியுங்கள்.

### பவுலின் ஆதங்கம்

பவுல் கொரிந்திய மக்களுக்கு எழுதிய அதே திருமுகத்தில் தனது ஆதங்கத்தை எழுத்துரைக்கிறார்.

சகோதர சகோதரிகளே! ஆவிக்குரியவர்களிடம் பேசுவதுபோல நான் உங்களிடம் பேச முடியவில்லை. மாறாக நீங்கள் ஊனியல்பு கொண்டவர்கள் எனவும், கிறிஸ்துவோடு உறவில் குழந்தைகள் எனவும் எண்ணிப் பேசுகிறேன். நான் உங்களுக்குத் திட உணவையல்ல, பாலையே ஊட்டினேன். ஏனெனில், திட உணவை உங்களால் உண்ண முடியவில்லை. இப்பொழுது அதே நிலையில்தான் இருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் உங்கள் ஊனியல்புக்கேற்பவே நடக்கிறீர்கள் (1 கொரி 3:1-2).

பவுல் என்ன சொல்ல விளைகிறார்? ஆவிக் குரியவர்கள் அதாவது சிறுபிள்ளைத்தனத்தை முற்றாக விட்டு வளர்ந்தோர் போல் அன்பிலும், ஆன்மீகத்திலும் வளரவில்லை. அதனால் வளர்ந்தவர்களிடம் பேசுவது போல உங்களுடன் பேச என்னால் முடியவில்லை. நீங்கள் குழந்தைத் தனத்தோடு வாழ்கிறீர்கள். அதனால் உங்களுக்குத் திட உணவைத் *(solid)* தரமுடியவில்லை. அதாவது புட்டு, இடியப்பம், தோசை, சோறு, மரக்கறி, மீன், இறைச்சி போன்ற வகை வகையான திடமான உணவைத் தரமுடியவில்லை. ஏனென்றால் நீங்கள் உடலால் வளர்ந்திருந்தாலும் அறிவால் வளர்ந்திருந்தாலும் இன்னமும் பால்புட்டியில் *(feeding bottle)* தானே பால் குடிக்கிறீர்கள்? இப்படிப்பட்ட உங்களால் திட உணவை உண்ண முடியவில்லை. உண்ண விரும்பவில்லை. ஒரு தேக்கத்தில் தேங்கி பால்புட்டியில் பால் குடிக்கும் பழக்கத்தை உங்களால் விட முடியவில்லை. குழந்தைத்தனத்தில் தரித்து விட்டீர்கள்.

பவுல் உருவகத்தில் பேசுகின்றார். இந்த உருவகப் பேச்சின் பொருளென்ன? குழந்தைத் தனத்தில் நிர்ணயிக்கப்பட்டு விட்டீர்கள். *(fixated)* இது ஒருவருக்கு ஒரு பெரிய பாதிப்பு. உளவளப் பாதிப்பு. நல்லவேளையாகப் பவுலுக்கு வுறொய்டின் எழுத்துத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் உங்களை, அதாவது அன்றைய கொரிந்திய மக்களை உளவளச் சிகிச்சைக்கு அனுப்பியிருப்பார். பவுல் சொன்னதை இயேசு மறுத்திருப்பாரா?

(தொடரும்)

வீடு வாங்க விற்க



நம்பிக்கை
நேர்மை
திறமை

Eugene Dominic
sales representative
Direct: 647.388.4038

HomeLife/Future Realty Inc., Brokerage
205- 7 Eastdale Drive
Markham, ON L3S 4N8
HOMELIFE HIGHER STANDARDS
Tel: 905.201.9977
Fax: 905 201 9229
eugenehomelife@gmail.com
eugenehomelife@gmail.com
Independently Owned and Operated, Realtor

MEGA Financial Group
• Life Insurance
• RESP
• RRSP





Philip (Anantham) Antony
Insurance Advisor
Direct: (647) 280-8984

# சவாலான ஆற்றல் மாற்றத்தை எதிர்கொள்ளும் மனித இனம்



Centesimus Annus Pro Pontifice அறக்கட்டளையின் உலகளாவிய மாநாட்டில் பங்கேற்றவர்களுடன் திருத்தந்தை (Vatican Media)

உரோமையில் *Centesimus Annus Pro Pontifice* அறக்கட்டளை சார்பாக "செயற்கை நுண்ணறிவு உருவாக்கம் மற்றும் தொழில்நுட்ப கருத்தியல்: மனித இனத்தின் நல்வாழ்வு, இயற்கையின் பராமரிப்பு மற்றும் அமைதியான உலகத்தை எவ்வாறு மேம்படுத்துவது" என்ற தலைப்பில் நடைபெற்ற உலகளாவிய மாநாட்டில் பங்கேற்றவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கானில் சந்தித்து உரையாற்றினார்.

தனது உரையில், பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்வில் செயற்கை நுண்ணறிவு வியத்தகு முறையில் ஆதிக்கம் செலுத்தி வருவதால், இக்கருத்து கவனத்துக்குரிய ஒன்றாகும் என்றும், இது நம் வாழ்க்கைத் தரம், தனிப்பட்ட மற்றும் உலகளாவிய உறவு, அதன் உறுதித்தன்மை போன்றவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் திருத்தந்தை கூறினார். செயற்கை நுண்ணறிவின் தற்போதைய மற்றும் எதிர்கால அம்சங்களையும், உற்பத்தித்திறன், வளர்ச்சியின் அடிப்படையில் அது ஏற்படுத்தும் நன்மைகள் மற்றும் அபாயங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு பல துறைகளின் கூட்டு முயற்சி அவசியம் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், உலக அமைதி தினத்தின்போது தான் அளித்த உரையிலும், அண்மையில் நடைபெற்ற *G7* உச்சி மாநாட்டில் செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்து உரையாற்றியதையும் நினைவூட்டினார்.

செயற்கை நுண்ணறிவு, அடிப்படையில் என்ன செய்ய வேண்டும் என்று கேள்வியெழுப்பிய திருத்தந்தை அவர்கள், இது மனித குலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறதா? தனிநபர்களின் நல்வாழ்வையும் ஒருங்கிணைந்த வளர்ச்சியையும் மேம்படுத்த உதவுகிறதா? அல்லது தொழில்நுட்ப மேம்பாட்டில் ஒருசிலரின் கைகளில் குவிந்துள்ள ஆற்றலை அதிகப்படுத்த உதவுகின்றதா? என்கிற கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க முயல வேண்டும் என்றார்.

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி எடுக்கப்படும் முடிவுகளில் தத்துவம் மற்றும் சட்டத்தின் பங்களிப்பு தேவை என்றும், மனிதகுல முன்னேற்றத்திற்குப் பயன்படும் கண்டுபிடிப்புகளைத் தூண்டுவதற்கும், விரும்பத்தகாத விளைவுகளைத் தடை செய்வதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கும் சரியான வழிமுறைகள் அவசியம் என்றும் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கல்வி, தகவல் தொடர்பு மற்றும் அனைத்துத் துறைகளும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் விரிவுபடுத்துவதற்கும், எதிர் காலத் தலைமுறையினருக்கு குறிப்பாக அவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்து, இக்கருவிகளை எவ்வாறு மதிப்பீடு செய்வது என்பதைக் கற்பிப்பதற்கும் ஓர் ஒருங்கிணைந்த செயல்முறையைத் தொடங்க வேண்டும் என்றார்.

மேலும், பாதுகாப்புத் துறைகளில் செயற்கை நுண்ணறிவின் நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளை ஆராய்தல், வேலை வாய்ப்புகளில் இவற்றின் ஆதிக்கத்தை ஆராய்தல், மக்களின் உறவு, அறிவாற்றல் திறன், அவர்களின் நடத்தைகளில் செயற்கை நுண்ணறிவின் ஆதிக்கம் மற்றும் அதன் கட்டுப்பாட்டை ஆராய்தல் அவசியம் எனவும், இது ஒருபோதும் மனிதர்களைக் குறைத்து மதிப்பிட அனுமதிக்கக்கூடாது எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை. மனிதகுலம் தற்போது ஒரு சவாலான ஆற்றல் மாற்றத்தை எதிர்கொள்கிறது என்றும், அம்மாற்றம் எவ்வகையிலும் மனித ஆற்றலை கட்டுப்படுத்த அனுமதிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை அவர்கள், உண்மையில் நாம் தொழில்நுட்ப அதிகாரத்திற்கு சரணடைகிறோமா அல்லது மனித ஆற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறோமா என்று நமக்குள்ளே கேள்வியெழுப்ப வேண்டுமென்றும் கூறினார்.

# பெருவெள்ளத்தால் 772000 பங்களாதேஷ் குழந்தைகள் பாதிப்பு


பகளாதேஷில் வெள்ளப்பெருக்கு (AFP or licensors)

பங்களாதேஷ் நாட்டின் வடகிழக்குப் பகுதியின் பெருவெள்ளத்தால் 7இலட்சத்து 72ஆயிரம் குழந்தைகள் உட்பட 20 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெப் என்னும் ஐ.நா.வின் குழந்தைகளுக்கான அவசரகால நிதியமைப்பு அறிவித்துள்ளது.

தண்ணீர் மட்டம் உயர்ந்துவரும் நிலையில், நீரில் மூழ்குதல், சத்துணவின்மை போன்றவைகளால் உயிரிழப்பு, நீர் தொடர்புடைய தொற்றுநோய்களுக்கு உள்ளாதல், இடம்பெயரும் துயரங்கள், முகாம்களில் தவறாக நடத்தப்படல் போன்றவைகளுக்கு குழந்தைகள் உள்ளாவதாக யுனிசெப்பின் அறிக்கைத் தெரிவிக்கிறது.

பங்களாதேஷ் அரசின் ஒத்துழைப்புடன் 5 நாட்களுக்கு மேலாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு நீர் விநியோகத்தை மேற்கொண்டு வருவதாகவும், மேலும் தேவையான அவசர உதவிகளை வழங்க முயற்சிகளை மேற்கொள்வதாகவும் இந்த ஐ.நா. அமைப்பு கூறுகிறது.
பக்ரீத் என்னும் இஸ்லாமிய விழாவை முன்னிட்டு, கல்விக்கூடங்கள் ஜூன் 13 முதல் ஜூலை 2 வரை மூடப்பட்ட நிலையில், 810க்கும் மேற்பட்ட அரசு பள்ளிகள் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டதுடன், ஏறக்குறைய 500 பள்ளிகள் தங்குமிடங்களாக மாற்றப்பட்டும் ஏறக்குறைய 140 சிறு மருத்துவ உதவி மையங்கள் வெள்ளத்தாலும் பாத்திக்கப்பட்டன.

---

# ஆப்கானிஸ்தானில் பெண் குழந்தைகளுக்கு மறுக்கப்படும் கல்விச் சுதந்திரம்!

ஆப்கானிஸ்தானில் பெண் குழந்தைகள் மேல்நிலைப் பள்ளிகளில் சேர தடைவிதிக்கப்பட்டு ஜூன் 13, 1000 நாட்கள் நிறைவடையும் நிலையில், யுனிசெப் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் கேத்தரின் ரூசெல் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், இன்றைய நாள் ஒரு சோகமான மற்றும் மனச்சோர்வு நிறைந்த நாளாக அமைந்திருக்கிறது என்றும், இந்த 1000 நாட்கள் என்பது பல இலட்சக்கணக்கான மணிநேர பாடங்களை இழந்ததற்குச் சமம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
மேலும் இத்தடையால் 15 இலட்சம் பெண் குழந்தைகளின், கல்விக்கான அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன என்றும், அவர்களுக்கான வாய்ப்புகள் குறைந்து, மனநலம் பாதிப்படைவதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்றும் உரைத்துள்ள கேத்தரின் ரூசெல் அவர்கள், குழந்தைகள், குறிப்பாக பெண் குழந்தைகளின் உரிமைகளை, அரசின் கொள்கைகளுக்கு பிணையக்கைதிகளாக மாற்றமுடியாது என்றும், அவர்களின் வாழ்க்கை, எதிர்காலம், நம்பிக்கை மற்றும் கனவுகள் அனைத்தும் சமநிலையில் துவங்கும் நிகழ்வு என்றும் கூறியுள்ளார்.
இந்தத் தடையின் தாக்கம் பெண் குழந்தைகளைத் தாண்டி இச்சூழல் மனிதாபிமான நெருக்கடிகளை உருவாக்குவதோடல்லாமல், ஆப்கானிஸ்தானின் பொருளாதார மற்றும் வளர்ச்சிப்பாதையில் பாதிப்புகளை உருவாக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
கல்வி வாய்ப்புகளை மட்டுமல்ல, மாறாக பெண் குழந்தகளை, இளம் வயது திருமணம், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பல்வேறு உடல்நலன் சார்ந்த குறைகளிலிருந்து பாதுகாப்பதோடு, ஆப்கானிஸ்தானை அடிக்கடி பாதிக்கும் வெள்ளம், வறட்சி மற்றும் பூகம்பம் போன்ற பேரழிவுகளை எதிர்கொள்ளவும் அவர்களை வலுப்படுத்த வேண்டிய அவசியமும் உள்ளது என்றும் ரூசெல் உரைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் உதவ யுனிசெஃப் தன்னார்வலர்கள் கடுமையாக உழைப்பதாகவும், 27 இலட்சம் குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வி மற்றும் 6,00,000 இலட்சம் குழந்தைகளுக்கு சமூக அடிப்படையிலான கல்வி வழங்கப்படுவதை உறுதிப்படுத்திய ரூசெல், இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு மாணவிகள் பயன்பெறுவதாகவும், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து,



பள்ளி உள்கட்டமைப்பை சிறந்த முறையில் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தத் துயரமான நினைவைக் குறிக்கும் இந்நாளில், அனைத்துக் குழந்தைகளையும் உடனடியாகப் பள்ளிக்குத் திரும்ப அனுமதிக்குமாறு அரசு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்ட ரூசெல், இச்சூழலில் முன்பிருந்ததை விட பாதிக்கப்பட்டிருக்கும் இச்சிறுமிகளின் வாழ்க்கையில் ஈடுபாட்டுடன் உழைக்கவும் ஆதரவளிக்கவும் உலகளாவிய சமூகத்தைக் கேட்டுக்கொள்வதாகவும், மக்கள் தொகையில் சம அளவு தொகை கவனிக்கப்படாமல் விடப்பட்டால் எந்த ஒரு நாடும் முன்னேற்றம் அடையாது என்பதையும் தன்னுடைய அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

# தெற்காசியாவில் அதிகரித்து வரும் வெப்பநிலை!


வெப்ப அலை (2023 Getty Images)

பல நாடுகளில் வெப்ப அலை நிலைமைகள் வலுவிழந்து வருவதால், குழந்தைகள் மற்றும் கைக்குழந்தைகளின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு குறித்து யுனிசெஃப் நிறுவனம் மிகவும் அக்கறை கொண்டுள்ளதாக அதன் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. மே 20 அன்று இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட ஐந்து நாள் வெப்ப அலை எச்சரிக்கையின்படி, தில்லி உட்பட இந்தியாவின் பல வட மாநிலங்களில், இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு முன்பு வெப்பநிலை 43-47 °C ஆக உயர்ந்தது என்பதையும் அவ்வறிக்கையில் யுனிசெஃப் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பாகிஸ்தானில் மே 23 முதல் 27 வரை கடுமையான வெப்ப அலை வீசும் என அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதைத் தொடர்ந்து, பஞ்சாப் அரசு மே 25 முதல் 31 வரை பள்ளிகளை மூடியுள்ளது என்பதையும் அதன் அறிக்கையில் எடுத்துக்காட்டியுள்ளது யுனிசெஃப் நிறுவனம்

தெற்காசியாவில் அதிகரித்து வரும் வெப்பநிலை, குழந்தைகள் பாதுகாக்கப்படாவிட்டாலோ அல்லது நீரேற்றம் செய்யப்படாவிட்டாலோ, அது அவர்களில் இலட்சக் கணக்கானோரின் உடல்நலத்தை பெரும் ஆபத்துக்கு உட்படுத்தலாம் என்றும் அவ்வறிக்கையில் யுனிசெஃப் நிறுவனம் எச்சரித்துள்ளது.

குழந்தைகளைப் பொறுத்தளவில் அவர்களின் உடலில் இருந்து அதிகப்படியான வெப்பத்தை வெளியேற்ற முடியாது ஆதலால், இது நீரிழப்பு, அதிகரித்த உடல் வெப்பநிலை, விரைவான இதயத் துடிப்பு, பிடிப்புகள், கடுமையான தலைவலி, குழப்பம், மயக்கம் மற்றும் கோமாவிற்கு வழிவகுக்கும் என்றும், இதனால் நீரிழப்பு, வெப்ப பக்கவாதம் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது யுனிசெஃப் நிறுவனம்.

# மத்திய ஆபிரிக்காவில் 30 இலட்சம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு நெருக்கடி!

இன்றையச் சூழலில், மத்திய ஆபிரிக்கக் குடியரசின் 30 இலட்சம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் நெருக்கடிகள் மற்றும் துயரங்களை எதிர்கொண்டு வாழ்கின்றனர் என்று யுனிசெப் நிறுவனம் கூறியுள்ளது.

ஜூலை 2, இத்தகவலை அறிக்கையொன்றில் வழங்கியுள்ள அந்நிறுவனம், மத்திய ஆபிரிக்கக் குடியரசில் கடந்த பத்து ஆண்டுகளாக நீடித்து வரும் மோதல் மற்றும் உறுதியற்ற தன்மையால் இப்படியொரு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. 2 குழந்தைகளில் ஒருவருக்கு நல சேவைகள் கிடைப்பதில்லை என்றும், மூன்றில் ஒரு பங்கு (37%) குழந்தைகள் மட்டுமே தவறாமல் பள்ளிக்குச் செல்கின்றனர் என்றும் குறிப்பிடும் அவ்வறிக்கை, மூன்று இளம் பெண்களில் ஏறக்குறைய இருவர் (61%) 18 வயதிற்கு முன்பே திருமணம் செய்து வைக்கப்படுகிறார்கள் என்றும், நாட்டின் ஏறத்தாழ 40 விழுக்காட்டு குழந்தைகள் நீண்டகால ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கிறது.



மேலும் பலவீனமான நிறுவனங்கள் மற்றும் வன்முறையின் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் யாவும், குழந்தைகளின் உரிமைகளுக்கான பல ஆபத்துகளை அதிகரிக்கின்றன என்று உரைக்கும் அவ்வறிக்கை, மத்திய ஆப்ரிக்கக் குடியரசின் குழந்தைகள் கண்ணுக்குத் தெரியாத பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர் என்றும், அவர்கள் வலிகளும் இழப்புகளும் அதிகமாகிவிட்டன என்றும் எடுத்துக்காட்டுகின்றது என்றும் இந்த முக்கியமான வேளையில், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசின் குழந்தைகளின் போக்கை மாற்றுவதற்கு அனைத்துலக சமூகம் அணிதிரள வேண்டிய தருணம் இது என்றும், அதற்கான நம்பிக்கை இருக்கிறது என்றும் கூறுகிறது இந்த அறிக்கை.

# காசாவில் 21,000 குழந்தைகள் வரை காணவில்லை!


தெற்கு காசாவில் போரில் காயம்பட்டுள்ள தாய் மற்றும் அவரது குழந்தைகள் (AFP or licensors)

காசாவில் நிகழ்ந்து வரும் போரால் **21,000** குழந்தைகள் வரை காணவில்லை என்றும், பலர் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியுள்ளனர், பலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர், பலர் அடையாளம் தெரியாத கல்லறைகளில் புதைக்கப்பட்டுள்ளனர் அல்லது அவர்களது குடும்பங்களை இழந்துள்ளனர் என்றும், *Save the Children* எனப்படும் உலகளாவிய குழந்தைகள் நல அமைப்பு அறிக்கையொன்றில் கூறியுள்ளது. இதற்கிடையில், குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகளைப் பாதுகாக்க தேவையான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும், மோசமான பாதுகாப்பு நிலைமையால் குழந்தைகளை மீட்கும் நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது. ஒவ்வொரு நாளும் தாங்கள் ஆதரவற்ற குழந்தைகளைக் காண்பதாகவும், அவர்களைத் தொடர்ந்து ஆதரிப்பது கடினம் என்றும் கூறும் காசாவிலுள்ள இவ்வமைப்பின் பணியாளர்கள், பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் அக்குழந்தைகளை அவர்களின் பெற்றோருடன் சேர்ப்பதற்குக் கடுமையான முயற்சிகளை எடுத்து வருவதாகவும் உரைத்துள்ளனர்.

தனித்துவிடப்பட்ட குழந்தைகளை அழைத்துச் செல்லும் அண்டை வீட்டாரும், குடும்ப உறுப்பினர்களும் தங்களுடைய அடிப்படைத் தேவைகளான தங்குமிடம், உணவு, தண்ணீர் போன்றவற்றைப் பூர்த்தி செய்யப் போராடுகிறார்கள் என்றும், இத்தகையதொரு சூழல் வன்முறை, முறைகேடுகள், சுரண்டல், புறக்கணிப்பு ஆகிய சமூகத் தீமைகளின் ஆபத்தை அதிகரிக்கின்றது என்றும் அவ்வமைப்பின் பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் குழந்தைகளின் உயிரைப் பாதுகாக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுமாறும், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனிய ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்கள், உதிரி பாகங்கள் மற்றும் வெடிமருந்துகள் கொடுப்பதை உடனடியாக நிறுத்துமாறும் *Save the Children* அமைப்பு பிரித்தானிய அரசை கேட்டுக்கொண்டுள்ளது. கடந்த **2023**-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் **7**-ஆம் தேதி இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கியது முதல் **14,000**-க்கும் மேற்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டுள்ள வேளை, அவர்களில் பாதி பேர் இன்னும் முழுமையாக அடையாளம் காணப்படவில்லை என்றும், அடையாளம் காண முடியாத அளவிற்கு அவர்களின் உடல்கள் சிதைந்துள்ளன என்றும் கூறியுள்ளது காசா நல அமைச்சகம்.

# உக்ரைன் போரை முடிவுக்கு கொணர சுவிட்சர்லாந்தில் அமைதி உச்சி மாநாடு!

ஜூன் **15**, சுவிட்சர்லாந்தின் *Burgenstock* சுற்றுலா மகிழ்விடம் ஒன்றில் நடைபெற்ற உலகத் தலைவர்களின் அமைதி உச்சி மாநாட்டில் அந்நாட்டின் அரசுத் தலைவர் வோலோதிமிர் ஜெலென்ஸ்கி நிகழ்திய உரையின்போது, குழந்தைகளும் கொடூரமாகக் கொல்லப்படும் உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு உலகத் தலைவர்களிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

மேலும் மற்ற நாடுகளிலிருந்து குழந்தைகளை கடத்தவோ, அமைதியை குலைக்கவோ எவருக்கும் உரிமை இல்லை என்று குறிப்பிட்ட ஜெலென்ஸ்கி, அத்தகைய கொள்கைகளின் செயல்திறனை நாங்கள் உறுதிசெய்ய முடியும் என்றும் தனது உரையில் தெரிவித்தார்.

பிப்ரவரி **2022**-இல் இரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பு தொடங்கியதில் இருந்து இரஷ்யா மற்றும் இரஷ்யாவின் ஆக்கிரமிப்பு பகுதிகளுக்கு அவர்களின் வீடுகளில் இருந்து **20,000** உக்ரேனிய குழந்தைகள் நாடு கடத்தப்பட்டு வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்ததாக கியேவ் அறிக்கை கூறுகின்றது என்றும் ஜெலென்ஸ்கி குறிப்பிட்டார்.

உக்ரைனுடன் அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்பு இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளார். முதலில், உக்ரேன் தனது படைகளை டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க், கெர்சன் மற்றும் சபோரீஷியா ஆகியவற்றிலிருந்து திரும்பப் பெற வேண்டும் என்பதும், இரண்டாவதாக, யுக்ரேன் நேட்டோவில் சேரக் கூடாது என்பதும் ஆகும்.

இதற்குப் பதிலளித்த உக்ரைன் அரசுத் தலைவர் வோலோதிமிர் ஜெலென்ஸ்கி அவர்கள், புதினின் போர்நிறுத்த முன்மொழிவு ஓர் இறுதி எச்சரிக்கை போலத் தெரிகிறது என்றும், இதை நம்ப முடியாது என்றும் கூறியுள்ளார். மேலும் போர்நிறுத்தம் தொடர்பான அவரது நிபந்தனைகளை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும் புதின் இராணுவத் தாக்குதலை நிறுத்த மாட்டார் என்றும் தெரிவித்துள்ளார்.



# காசாவில் இறக்கும் தருவாயில் ஊட்டச்சத்துக் குறைப்பட்டுள்ள குழந்தைகள்!


காசா குழந்தைகள் (AFP or licensors)

ஏறத்தாழ 3,000 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் தங்கள் குடும்பத்தினரின் கண்களுக்கு முன்பாகவே இறக்கும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், இரஃபா நகரம் தாக்குதல் காரணமாக உதவிபெறுவதிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையொன்றில் யுனிசெஃப் நிறுவனம் கூறியுள்ளது. ஆபத்தின் பிடியில் சிக்கித்தவிக்கும் அம்மக்களை மரணம் பெரும் அச்சத்திற்கு உள்ளாக்குகிறது என்றும், தொடர்ந்து நிகழும் வன்முறை மற்றும் இடப்பெயர்வு, அவர்களுக்கு நல வசதிகள் பெறுவதற்குத் தடைகளாக உள்ளன என்றும் தெரிவித்துள்ளது. ஊட்டச் சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படக்கூடிய குழந்தைகள் நோய்வாய்ப்படுவது பெரும் கவலை அளிக்கிறது என்றும், இரஃபாவின் வடக்குப்பகுதிக்கான உணவு உதவி விநியோகத்தில் சிறிதளவு முன்னேற்றம் காணப்பட்டாலும், தெற்கில் மனிதாபிமான அணுகல் வியத்தகு அளவில் குறைந்துள்ளது என்றும் அவ்வறிக்கையில் எடுத்துக்காட்டியுள்ளது அந்நிறுவனம்.

இதுகுறித்துக் கருத்துத்தெரிவித்துள்ள மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவிற்கான யுனிசெஃப் மாநில இயக்குனர் *Adele Khodr* அவர்கள், உணவு, ஊட்டச்சத்து பொருட்கள் மற்றும் நலப் பணிகளின் செயல்படாத்தன்மை காரணமாகக் குடும்பத்தின் கண்களுக்கு முன்பாக அவர்தம் குழந்தைகள் இறக்கும் கொடூரமான படங்கள் காசாவிலிருந்து தொடர்ந்து வெளிவருகின்றன என்று தனது வருத்தத்தை பதிவுசெய்துள்ளார். மேலும் இந்த 3,000 குழந்தைகளுக்கான பராமரிப்பு விரைவாகத் தொடங்கப்படாவிட்டால், அவர்கள் கடுமையான நோய்களால் தாக்கப்பட்டு, உயிருக்கு ஆபத்தான சிக்கல்களைச் சந்தித்து, இந்த மதியற்ற மனிதரால் உருவாக்கப்பட்ட பற்றாக்குறையால் கொல்லப்பட்ட சிறுவர் மற்றும் சிறுமிகளின் பட்டியலில் சேரும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார் *Khodr* கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு குழந்தைக்கு சிகிச்சை அளிக்கும்போது வழக்கமாக ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை இடைவிடாத பராமரிப்பும் மற்றும் சிறப்பு சிகிச்சை உணவு, பாதுகாப்பான நீர் மற்றும் பிற மருத்துவ உதவியும் அக்குழந்தைக்குத் தேவைப்படுகிறது என்றும் விளக்கியுள்ளார் *Khodr*.

---

# இரஃபா மீதான தாக்குதலை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு ஐநா நீதிமன்றம் உத்தரவு!


இடம்பெயர்ந்து செல்லும் பாலஸ்தீனியர்கள்

ஜனவரி 26 மற்றும் மார்ச் 28 தேதிகளில் கடைசியாக வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்குப் பிறகு, காசாவில் தற்போது மனிதாபிமான நிலைமை மிகவும் பேரழிவைத் தரக்கூடிய ஒன்றாக உள்ளது என்று, தனது ஆழ்ந்த கவலையைப் பதிவுசெய்துள்ளார் அனைத்துலக நீதிமன்றத்தின் தலைவர் *Nawaf Salam* இரஃபா மீது பல வாரங்கள் குண்டுவீச்சுகளுக்குப் பிறகு, மே 6 அன்று 1,00,000 பாலஸ்தீனியர்களை வெளியேறும்படி ஏற்கனவே உத்தரவிடப்பட்டது என்று கூறியுள்ள *Salam* அவர்கள், அங்கு இராணுவ நடவடிக்கைகள் இன்னும் தொடர்வதால், இது புதிய இடம்பெயர்தலுக்கு வழிவகுக்கிறது என்றும், எச்சரித்துள்ளார்.

இந்த வழக்கு ஐ.நா. இனப்படுகொலைக்கு எதிரான ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறுவதாக குற்றம்சாட்டிய தென்னாப்பிரிக்காவால் அனைத்துலக நீதிமன்றமான *ICJ*-க்கு கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.


Chapel
Ridge
FUNERAL HOME INC.
உங்கள் உறவொன்றைப் பிரிந்து தடுமாறும் வேளையில்
இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்
அனுபவத்தோடு கூடிய அன்பான சேவையை வழங்குகிறோம்
மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் சேவைகள்
We provide a full range of services to families who have
experienced a loss of a loved one, including:
Visitation
Funeral & Memorial Services
Receptions and
Arranging Burial & Cremation
printfast.ca
Christeen Seevaratnam
416-258-6759
Vilosan Sivatharman B.Eng
416-993-0826

# Faith Matters. Choose a Catholic Cemetery.



Give your family peace of mind by pre-planning your Catholic funeral and burial. While it may feel overwhelming, we've made planning ahead easy to understand. Contact us today to receive your free cemetery and funeral planning package and estate planning guide.

Benefit from our interest-free payment plans today.

## Visit one of our locations

Assumption Catholic Cemetery
Mississauga

Catholic Cremation Services
Mississauga

Christ the King Catholic Cemetery & Reception Centre
Markham

Holy Cross Catholic Cemetery & Funeral Home
Thornhill

Mount Hope Catholic Cemetery
Toronto

Queen of Heaven Catholic Cemetery
Woodbridge

Resurrection Catholic Cemetery
Whitby

St. Mary's Catholic Cemetery
Barrie

CATHOLIC CEMETERIES & FUNERAL SERVICES
ARCHDIOCESE OF TORONTO

catholic-cemeteries.com | info@cc-fs.ca

416·733·8544 | @catholiccemeteriesfuneralservices